உ

வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } பிலவ - சித்திரை 10—5—61 { இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினுய் ! கூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

குருவழிபாடு

உலகம் விரைந்து கொண்டிருக்கிறது. அவ்விரைவினை எல்லாத்துறைகளிலும் காண்கின்ருேம். இந்த வேகம் குறைந்து அமைதி பிறக்கவேண்டும். அந்த அமைதியே உலக நிலைபேறு, இன்ப ஆக்கம், துன்ப நீக்கம் முதலிய நலங்களைத் தரும். உயிரின் வேகத்தைக் கெடுத்து ஆளும் தன்மை, ஆன்ம நாயகனுகிய இறைவனுக்கே உண்டு. மணிவாசகப்பெருமான் 'வேகங் கெடுத்தாண்ட வேந்தன்' என அருளுதலை ஒப்பிட்டு இதனை 'உணரலாம். இறைவன் குருவடிவாகவந்தே இந்நல்லுதவியை உயிர்க்குச்செய்வான் ;

அக்கோலம் கண்டு கண்பெற்ற பயனைக் கொள்ளுதல் உயிர்க்கடன். குருவருள் பெற்றே திருவருள் நாட வேண்டும்.

சூரியகாந்தக் கல்லினிடத்தில் செவ்வொளி தோன்றுவது சூரியன் உதயத்தின் பின்னேயன்றோ? அதுபோலக் குருநாதன் வந்து அருளால் தோன்றுதலும் திருவடிஞானம் ஆன்மாவினிடத்தில் தோன்றும்; அது மட்டுமோ? சிவன் தோன்றித் தானும தோன்றி, உலகமெல்லாம் தன்னுள்ளே தோன்றி, உயிர்க்குயிராய் எங்கும் திருவருள் நின்ற நிலை தோன்றும் என்று அருணலம் கனிந்த அருணந்தி சிவாசாரியார் அருளுகின்றார்கள். குருவருளால் மட்டுமே இப்பெரும் பேற்றினைப் பெறமுடியும். ஆதலால் குருவழிபாட்டினைச் சைவ சித்தாந்தத்தில் எத்தகு உயர்நிலையில் வைத்துப் போற்றியுள்ளனர் என்ற உண்மையை இக்கால உலகு ஊன்றி உணர்தல் வேண்டும்.

பிறவியின் பயன் அறியாமை நீங்கி அறிவை விரிவடையச் செய்து அறிவுக்குள்ளே அறிவாய் விளங்குகின்ற இறைவனை அருள் துணையாக அறியாமல் அறிந்து, குறியாமற் குறித்து, அந்தக் கரணங்களோடும் கூடாமல் கூடாமல் குழைந்திருத்தல் என்று சாத்திர நெறி காட்டுகிறது. இவ்வரிய நிலையை உயிர்க்குக் கூட்டுவது குருவழிபாடு ஒன்றேயாகும்.

திருக்கயிலாய பரம்பரையில் நின்று நிலவும் இத்தருமையாதீன முதற்பெருங் குரவராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருவழிபாடு செய்து அருட்பேறு பெற்ற அருளாளர். அவர்கள் அவ்வின்ப அநுபவத்தைப் பலபடியாகத் தேனித்துத் தேனித்துத் தெளிந்த தமிழாக அச்சாரத்தைப் பிழிந்து வழங்கியருளியுள்ளார்கள்.

குருவழிபாடு செய்து தம் குருநாதரைத் தம் உள்ளத்தில் எழுந்தருளச் செய்துவிட்டார்கள். அதன்பிறகு, காண்பது,

கேட்பது, பிற காரியங்கள், பூண்பது, போகம் முதலிய அனைத்தும் அவர்களுக்குப் போய்யாய்ப் போயின ; "மாண் பாகத் தோற்றியின்ப வெள்ளமாய்த் துன்னி என்னுட் சம்பந்தன் வீற்றிருப்பதோன்றுமே மெய்" என்று கூறி யருளுகின்றார்கள். இவ்வாறு மெய்யாக வழிபட்டுக் குரு வருளால் வைத்தபடி இருக்கமாட்டாத மாந்தர்க்கே தினம் சித்தசலனம் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். சித்தசலனம் போக்கும் ஒரே ஒரு நெறி குருவழிபாடுதான் என்பதை, இங்கே உறுதிப்படக் காண்கின்றோம். 'நடுக்கற்ற காட்சி என்று திருவள்ளுவர் அறிவிற்கு விளக்கம் கூறுவார். சலனமில்லாத - துளக்கமில்லாத மெய்யான நிலைத்த அறிவு என்பது நடுக்கற்ற காட்சி என்பதற்குப் பொருளாகும். அவ்வறிவு குருவருளாலேயே கைவரப்பெறுவதாகும்.

திருவருளையும் குருவருளையும் உலகு பெறுதற்குற்ற ஞானத் தேக்கங்களே திருக்கோயில்களும் திருமடங்களும், இங்கு வந்து வழிபட்டு அருள் பெருக்கி வாழ்விற்குற்ற துணை இதுவென அறிந்து கடைப்பிடித்தல் மாந்தர் கடனாகும். அக்கடமை வழுவியதால்தான் எவ்வளவோ இன்னல்கள் - தீமைகள் - பெருகின.

இத்தீமை நீங்க வேண்டுமாயின் குருவழிபாடு வைய மேலாம் பரவுதல் வேண்டும். அவ்வழிபாட்டிற் தலைசிறந்து நின்ற குமரகுருபர அடிகள் இவ்வாதீன நான்காவது குரு மூர்த்திகள்மேல் பாடியருளிய பண்டார மும்மணிக்கோவை யிலே பல உண்மைகளைப் பாடியருளியுள்ளார்கள். குரு வழிபாட்டின் தெளிவு, 'என் செயலால் ஒன்று யான் செய்வ தில்லை' என்ற நிலையை அவர்கட்குத் தந்தது. 'சீவனா யிருந்த நான் என் குருநாதர் வாழும் ஊரிற் குறுகியதும் சிவனானேன்' என்று அருளியுள்ளார்கள். 'சிவமாக்கி எனையாண்ட அத்தன்' எனும் திருவாசகத்தை இதனோடு ஒப்பிட்டு இப்பேருண்மையை அறியலாகும். குருவழி பாட்டாலன்றோ இப்பெரும்பேறு வாய்க்கும்? அது தெரிந்து உலகு குருவழிபாடு மேற்கொண்டு தெளிவும் நலமும் பெறுமாக.

பிலவ ஆண்டு வைகாசித்திங்கள் 22 ஆம் நாள் இவ் வாதீன முதற் பெருங்குரவர்க்குக் குருவழிபாடு நிகழ இருக் கிறது. தருமையாதீனத்தே நிகழ இருக்கும் இவ்வழிபாட்டுத் திருநாளை யோட்டித் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் சைவசித்தாந்த வகுப்பும் நிகழ இருக்கின்றது. அவ்வகுப்பில் சிறந்த சித்தாந்தப் புலவர்களால் சிவஞான சித்தியார் பாடம்நடத்தப்பெறும். அன்புலகம் திரண்டுவந்து வழிபட்டும் கேட்டும் பயன் பெருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு ; சமய உலகின் விரிந்த பணிகளுக்கு இவ்வழிபாடு வித்தாகும் எனலாம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sivaloga Thiagarajaswamy Devasthanam, Achalpuram.

சம்பந்தப் பெருமான் சார்புடைய இத் திருத்தலத்து இன்று வழிபாடு செய்யும் பேற்றை ஆண்டவன் அருளப்பெற்று மனம் நிறைவுற்றேன். இறைவன் திருக்கோயில் எல்லாவாற்றானும் எழில்கொண்டு திகழ்கிறது. தருமை ஆதீனத்தின் அருமை யாண்டும் புலனாகிறது. தலத்தையோ தருமையின் திருப்பணி யையோ பாராட்ட இவன் ஆர்? வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.

(Sd.) சா. கணேசன்,
8—1—61.

Sri Panchanadeeswaraswami Devasthanam
Tiruvaiyaru

With a view to prepare a feature for All Indian Radio in Telugu to be broadcast from Vijayawada I had the previlege to visit this great temple. I have been given full information by the management. My respects are due to them.

(Sd.) B Kanakalingeswara Rao,
Drama Producer, A. I. R.
Vijayawada, 7—1—61.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

அருளிய

*அருளுரைச் சுருக்கம்

“கண்டேனிப் பாசங் கழிந்தேன் அமுதைமுகந்து
உண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன் — வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்ரகாசனையே நான்.”

அன்பர்களே! இந்த நாள் சிறந்த நாள். இந்நன்னாளில் பல கருத்துக்களைப் பக்தர்கள் உள்ளத்தே கொள்ளவேண்டும்; கொண்டவாறே ஒழுகிச் சமயநெறி நின்று இருமைப் பயனும் எய்தவேண்டும்; செந்தமிழ்ச் சொக்கர் திருவருளால் நலம்பல பெற்று நன்கு வாழவேண்டும்.

மக்கள் செம்மையாக வாழக் கடவுளிடம் பக்திகொள்ள வேண்டும். இடையில் தோன்றி மறையும் இவ்வுலகத்தில் திருவருளை அன்றி வேறு நிலையான பொருள் இல்லை. இக்குறிக் கோளோடு மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். தனிமனிதன் எதையும் செய்ய இயலாது. எதையும் உள்ளன்போடு செய்ய வேண்டும்.

செல்வம் திருவருள் துணையினால்தான் கிடைக்கும். அருளோடு கூடிய செல்வம்தான் நிலைத்திருக்கும். அச்செல்வம் ஆசானருளால்தான் கிடைக்கும். ஆசானின் அனுக்ரஹம் பெற்றால்தான் ஆண்டவன் அருள் கிடைக்கும்.

ஆசான் வழிபாட்டோடு ஆலயவழிபாடும் இன்றியமை யாதது. ஒருவன் பிறரை சொல்லினாலோ, செய்கையினாலோ துன்புறுத்தக்கூடாது. செல்வத்தினாலும் மனத்தினாலும் பிறரைத் தீமைக்குள்ளாக்கும் செய்கையைச் செய்யவும், காணவும், சிந்திக்கவும் கூடாது. இதுவே உத்தம தர்மமாகும்.

22—4—61 ஆம் நாள் தருமையில் கனகாபிஷேக விழாக் குழுவினருக்கு அளித்த பாராட்டு விழாவில் அருளியது.

போய் வேடம் நீக்கி தூயவேடத்துடன் மக்களுக்குப் பணிபுரிய வேண்டும். செம்மையாக வாழத் திருமுறை ஓதுதல்வேண்டும்.

எங்கள் ஆதிபரமாசாரியப் பெருமானாரும்,

" ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுடன் அஞ்செழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் "

என்று அருளியுள்ளார்கள். திருமுறைகளை ஓதினால்தான் உய்தி கிட்டும் என்பது துணிவு. இவ்வாறு நல்ல கருத்துக்களை உணர்ந்து, தோத்திர சாத்திர நெறிநின்று வையத்தில் வாழ்வாங்கு வாழ எல்லாம்வல்ல செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் புரிவாராக.

" சித்திதருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்திதருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப்பிரகாசன் உண்மை
தருநர்தன் நங்குருநாதன் "

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

சிவ ஞான போதம்

கட்டுரை 28

முதுபெரும் புலவர்

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

(மலர் 20, இதழ் 5, பக்கம் 286 இன் தொடர்பு)

நான்காவததிகரணம்

1. ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது. (சூத்திரம் பொழிப்புரை)

2. கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே அக் கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு. (சூர்ணிக்கோத்து)

3. துயிலோடும் பயில்வுறும் அதனால் உயிர் எனப் படுவது இந்த உடலின் வேறு உளது. (சித்தியார் சிவஞான முனிவருரை)

சூக்குமதேகான்மவாதி கூற்று :- சப்த பரிச ரூப ரச கந்தங்கள் என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும் பூதாதி யகங்காரத்தினின்றும் பிறக்கும் என்றும் அத் தன்மாத்திரை களால் இந்திரியங்களுக்கு அறியும்வினை நிகழும் என்றும் நீரும் உடன்பட்டுள்ளீர். அதனை,

" ஓசைநற் பரிச ரூப இரதகந் தங்கள் என்று
பேசுமாத் திரைகள் ஐந்தும் பிறக்கும்பூ தாதிகத்தின்
நேசஇந் திரியங் கட்கு நிகழறி விதனாற் கண்டும்
ஆசைசேர் மனாதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான் "

(சிவஞானசித்தியார் 154)

என்னும் பாடலே உணர்த்தும்.

அவ் வைந்து பொறிகளின் வேறாய் அவ்வகை அறிவது புரியட்டக தேகமே ஆம்என அமையும். அது புறத்து நிக ழாது. அகத்தே நின்று பொறிகளைப் புறத்திற்போக்கி அறியும்.

சைவசித்தாந்திகூற்று:- ஒடுங்கிய அவத்தை சோப்பனம் (கனவு), (அதையே 'ஒடுக்கம்' என்று சொன்னது இச் சூத்திரம்), அச் சோப்பனத்தானத்தில் நிகழ்ந்தவற்றை நனவில் மயங்கி அறிகின்றன பொறிகள். அதனால் ஆன்மா வேறு. அச் சோப்பனத்தானம் வேறு. அத்தானத்தில் நிகழும் நிகழ்ச்சி வேறு. நிகழ்ந்தவற்றை அறியும் பொறிகள் வேறு. அவை வெவ்வேருய் இருக்கவும் அந்த ஸ்தானமே (புரியட்டக தேகமே) அறிவது எனல் பொருந்தாது. ஒடுக்கம் - ஒடுங்கின சோப்பனத்தானத்தில் நிகழ்ந்தவற்றைக் குறித்தலால் ஆகுபெயராயிற்று.

சூக்குமதேகான்மவாதி கூற்று:- சோப்பனத்தில் நிகழ்ந்தவற்றை அறிவதும் சூக்குமதேகமே ஆகலின், இது சித்தசாதனம். (சித்தசாதனம் - முன்பு சித்தித்ததையே பின்பும் சாதித்தல்) ஆம்.

சித்தாந்திகூற்று:- நனவிலே, கனவுகண்டாம் என்றும் கண்டிலம் என்றும் நிற்பது உளது. ஆகலின், அதுவே அவ்வான்மாவாம்.

ஒடுக்கம் அறிதல் - என்றது ஒடுக்கத்தில் நிகழ்ந்தவற்றை நனவில் மயங்கியறிதல் என்னும் பொருளது ஆகும். ஆதலின், சித்தசாதனம் ஆகாது கனவைக்கண்ட சூக்கும தேகமே நனவில் அக்கனவை நினைந்து அறியும் ஆயின், கண்டபடி அறியாது மயங்கியறிதல் கூடாது. அறிவது உயிராயின், அவ்வுடல்போல் ஒருதன்மையதாதல் இல்லை. அகத்திற்செல்வதும் புறத்திற்செல்வதும் ஆகிய வேறுபாடு உடையது உயிர். அதனால் மயங்கி அறிவது உயிர்க்கே கூடும். அதனால், சூக்கும தேகம் அறியும் எனல் பொருந்தாது. உயிரே அறியும், அங்கனம் அறியும் உயிர் வேறு உண்டு என்பது கண்டுகொள்க. சிலசில தத்துவங்களின் சேர்கையும் பிரிகையும் ஆன்மா உடையது. அதனால் மயக்கம் உளதாகும். உடல் மயங்காது.

கனவுகண்ட சூக்கும தேகமே நனவில் அறியும். அறிவது உயிர் என வேறு ஒன்றைக் கொள்ளல் பொருந்தாது என்னும் சூக்கும தேகான்மவாதிக்கு மறுப்பு இது:-

'கனவுகண்டோம்' 'கனவுகண்டிலோம்' என்னும் சொற்றொடர் உலகில் வழங்கக் கேட்கின்றோம். அத் தொடர்க்குரிய எழுவாய் 'சூக்குமதேகம்' ஆகாது. சூக்கும தேகம் அத்தொடரை வழங்குமோ? அதற்கு நினைத்தல், உரைத்தல் முதலியன உளவோ? அது சடம்தானே! அத னின் வேறான ஒரு சித்துப் பொருள் இருந்தால் அன்றி அத் தொடர் வழங்கப்படுமோ? கனவுகண்டதும் காண்பதும் காணாததும், கண்டேன் காண்பேன் கண்டிலேன் என வழங் குவதும் அச் சித்தாகிய பொருள் ஆமே அன்றிச் சடமாகிய சூக்குமதேகம் ஆகாது, அதனால், 'நனவின்கட் கனவு கண்டாம் என்றும் கண்டிலம் என்றும் நிற்பது உளது. ஆகலின், அதுவே ஆன்மாவாம் என்றது' பொழிப்புரை.

சித்தசாதனம்:- முன் சித்திக்கப்பட்டதையே மீண்டும் சாதிக்கும் தன்மை. இது பூர்வபட்சி சித்தாந்தி இருவரிடத் தும் நிகழும். சித்தாந்தியினிடத்து நிகழ்வது பூர்வபட்சியின் கொள்கைக்குச் சாதனம் ஆகி நகைதரும்.

வெண்பா

அவ்வுடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலிற் சென்றடங்கி — அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறல்உடல் நீ அல்லை மற்று.

இவ் வெண்பாப் பொருளை நாலாஞ்சூத்திரத்தின் விளக்கம் நன்குணர்த்தும். ஈண்டுச் சிறிது விளக்குதும்.

1. அவ்வுடலின் நின்று உயிர்த்தல் - முன் அதிகரணத் தில் உயிர் அன்று என விலக்கப்பட்ட தூலதேகத்தில் நின்று உயிர்த்தல். உயிர்த்தலால் உயிர். உயிர்த்தலை மூச்சுவிடுதல் என உலகம் வழங்கினும் அது சொற்பொருள் ஆகாது. உயிர் எழுத்து என்றதற்கு மூச்செழுத்து, மூச்சுவிடும் எழுத்து மூச்சைப்போலும் எழுத்து எனல் பொருந்துமோ? பொருந் தாது. அதனால் உயிர்த்தல் என்றதன் பொருளை அது பயவாது. 'தொழிற்படுதல்' என்றது உரை. இஃது இடங் குறித்தெழுதிய பொருள். இதுவே அதன் பொருளன்று.

2. ஐம்பொறிகள் - மெய் வாய் கண் மூக்குச் செவி ஆகிய அறி கருவிகள் (ஞானேந்திரியம்)

3. தாம் கிடத்தல் - அவ்வுடம்பில் உயிர்ப்பு ஒழிந்து கிடத்தல்.

4. செவ்விது:- ஈண்டு வருத்தம் இல்லாமையாகிய செம்மை.

5. அவ்வுடல் - அத் தூலதேகம்.

6. சென்று அடங்கல் - போய் அடங்குதல். 'சென் ஹெடுங்கி' என்ற பாடமே சிறந்தது. ஒடுக்கம் அடக்கம் இரண்டும் வேறுபாடறக் கொள்ளப்பட்டன. வெய்யோன் ஒளியில் ஒடுங்கி' என்புழி, ஒடுங்கி - அடங்கி என்று உரைத் ததை உணர்க. 'ஒடுக்கம் அறிதலின்' 'ஒடுங்கின இடத்து' 'ஒடுங்காத இடத்து' 'காட்டு ஒடுங்கக் காணுதே' 'ஒடுங்கா துடல் நண்ணில்' என வருவனவற்றையும் நோக்குக. ஒடுக்கம் வேறு அடக்கம் வேறு. பொறியடக்கம் புலனடக்கம் என்பன பொறியொடுக்கம் புலஞெடுக்கம் எனப்படலாமோ? 'ஐம்புலஞெடுக்கம்' என்று (சூ-3) உளதே என்பாரும் இருப் பர். அவரது குசாக்கிர புத்திக்குப் பரிசுதரல்வேண்டும்) உடல் அடக்கம் செய்யப்பட்டது என்பதை உடல் ஒடுக்கம் செய்யப்பட்டது எனலாமோ? 'அடக்கம்' செயப்படுபொரு ளைத் தோற்றும் பெயர். இரண்டும் ஒன்றுகா. (இஃது இடைப் பிறிதாக அமைந்த சிற்றுராய்ச்சியாயினும் ஒரு பாட பேதத்தை உணர்த்தலின் பயனுடையது). ஒடுக்கம் அறித லும் அடக்கம் அறிதலும் ஒன்றுமோ ?

7. அவ்வுடலின் வேறு ஒன்று - அத் தூலதேகம் போல வேறு ஒரு (சூக்கும) தேகம்.

8. கொண்டுவிளையாடல் - எடுத்துக்கொண்டு வேறு ஒரு வழியால் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிதலாகிய விளையாடல்.

9. மீண்டு அதனைமாறல் - மீள அதை மாறித் தூல தேகத்திற் சேறல்.

10. நீ உடல் அல்லை - (அக்காரணத்தால்) நீ அச் சூக்கும தேகம் அல்லை. அதனின் வேறுவை.

அவ்வெண்பாவின் பொழிப்புரை

'மேல் (அதிகரணம் மூன்றில்) உயிர் அன்று என்று விலக்கப்பட்ட தூலதேகத்தில் நின்று தொழிற்படுவன ஆகிய ஐம்பொறிகள், அத் தேகத்திலே உயிர்ப்பு ஒழிந்துகிடக்க, அவை அங்ஙனம் கிடந்த வழிப் புறத்து நிகழும் தொழிற் பாடெல்லாம் அடங்கி, அவ்வுடம்பின் உள்ளே வருத்தம் இன்றிச் சென்று, அத் தூலவுடம்பு போல அதனின் வேறான தோர் உடம்பை எடுத்துக்கொண்டு, வேறொரு வழியால் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிந்து விளையாடி, மீள அதனை மாறிச் சேல்லுதலால், நீ அச் சூக்கும தேகம் (வேறு ஒன்று) அல்லை. அதனின் வேறு ஆவாய்.'

இவ் வேண்பாவில் அவ்வுடல், என்ற மூன்றும் 'அதனை' என்ற உருபேற்ற சுட்டுச்சொல் ஒன்றும் தூலதேகத்தையே குறிப்பன. 'வேறு ஒன்று' 'உடல் என்ற' இரண்டும் சூக்கும தேகத்தைக் குறிப்பன. இது பிறருரையிற் கண்டவாறு கொண்டுரைத்ததாகும். ஆயினும், 'அவ்வுடல்' என்ற வற்றையும் 'அதனை' என்றதையும் சூக்கும தேகத்தைக் குறிப்பனவாகக் கொண்டுரைத்தல் சாலப்பொருந்துமாறும் அறிக. 'உயிர்ப்ப என்றது அன்பெறுத அகரவீற்றுப் பல வறிசொல்' என்று குறிப்பெழுதப்பட்டது. உயிர்ப்பது ஆன்மா கிடப்பன பொறிகள். உயிர்ப்பனவாகிய பொறிகள் எனல் பொருந்துமோ? சென்று அடங்குதல் தூலதேகத்திற் கேற்குமோ? ஏலாமையால்தான் 'அடங்கி' என்றதை மாற்றி யுரைக்கலாயிற்று, இதில் தூல சூக்கும தேகங்களின் மாற லைக் கூறலே முக்கியார்த்தம். அதை ஏதுவாகக் காட்டிச் சூக்கும தேகத்தின் வேறு ஆன்மா என்றலே கருத்து.

(தொடரும்)

மண எழில் வேண்டும்!

செஞ்சோற்கோண்டல்

வித்துவான். சொ. சிங்காரவேலன், B. A.

இளங்காலைக் கதிர்களிலே எழிலைக் கண்டேன் ;
எழுந்துவரும் பூங்காற்றில் எழிலைக் கண்டேன் ;
விளங்கிவரும் வெண்ணிலவில் எழிலைக் கண்டேன் ;
வேய்ங்குழலின் ஓசையிலே எழிலைக் கண்டேன் ;
துலங்குகின்ற அந்தியிலே, தோன்றும் முல்லைத்
தொடர்கொடியில், சண்பகத்தில் எழிலைக் கண்டேன் ;
இலங்குகின்ற மனிதரிடம் எழில்தான் இல்லை ;
இதயமில்லா வெற்றுடலந் தனையே காண்போம். (1)

காவியத்தில் ஓவியத்தில் எழிலைக் கண்டேன் ;
கட்டுரையில் சிறுகதையில் எழிலைக் கண்டேன் ;
ஆவியொத்த பைந்தமிழில், கவியின் போக்கில்
அங்கெல்லாம் எழில்கண்டேன் ; ஆனால் இங்கே
காவியொத்த கருங்கண்ணார், திண்டோள் வீரர்
கணக்கின்றி உண்டன்றி அவரிடத்தே
மேனியிலோ எழில்இல்லை ; வியக்கின் றீரா ?
மேம்போக்குச் சுவடில்லை ; உணர்ந்த உண்மை. (2)

உள்ளத்தில் மாசுண்டு ; பிறரை எய்க்கும்
உரமுண்டு ; மறமுண்டு ; அறத்தை மாய்க்கும்
கள்ளமுண்டு ; களங்கந்தா னுண்டு ; மக்கள்
கருத்தினிலே கூர்வானின் நஞ்சே யுண்டு ;
அள்ளுகின்ற இயற்கையிலே அழகு நின்று
ஆ,ஆஎன் றோலித்திட்டுச் சிரித்தல் கேட்டேன் :-
" துள்ளுகின்றாய் மானிடனே ! என்னில் தோன்றும்
தூயவெழில் உனக்கில்லையாம் ; துருவிக் காணாய் " (3)

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக விழாவில்

கோபூஜை



[illegible] கஜபூஜை

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி கனகாபிஷேக விழாவில்

கஜபூஜை

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி கனகாபிஷேக விழாவில்

ஸ்ரீ ஞானபுரீசுவரரை வழிபடுதல்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி கனகாபிஷேக விழாவில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களுக்கு
திருப்பனந்தாள்
ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள் அபிஷேகித்தல்

தருமை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேகப் பாராட்டு விழாவில்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

நிகழ்த்திய

தொடக்க உரை

"நின்னுவார் பிறரின்றி நீயேயானாய்
நினைப்பார்கண் மனத்துக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க்கோர் அமுதமானாய்
மறைநான்கும் ஆனாய் ஆறங்கமானாய்
பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளேயுன்னை
என்னானாய் என்னானாய் என்னினல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே"

"மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின்மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற்செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்து உச்சியுள்ளான்
காளத்தியான் அவன்என் கண்ணுளானே"

ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்தின் திருவடித், தாமரைகளை வணங்கிக் கனகாபிஷேகப் பாராட்டு விழா நிகழ்ச்சியைச் செந்திலாண்டவன் திருவருள் துணைகொண்டு தொடங்கி வைக்கின்றேன்.

அன்பர்களே! தமிழகத்தின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தக்க பொன்னாள் கனகாபிஷேகத் திருநாள். இத்திருநாளில் நீங்கள் எல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்தின் ஆசியைப் பெற்றுய்ய வந்திருக்கிறீர்கள்.

இறைவன் திருமுதுகுன்றத்தில் நம்பியாரூரராகிய சுந்தரருக்குப் பன்னீராயிரம் பொன்னளித்தான். திருப்புகலூரில் அவ்வடியவருக்குப் பெருமான் செங்கல்லைப் பொன்கல்லாக்கி அளித்தருளினன். திருவாவடுதுறையில் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஆயிரம் பொன்னளித்தான். இப்படி அடியார் பெருமக்களுக்கு இறைவன் அள்ளி வழங்கிய பொருள்கள் எண்ணற்றவை. "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" என்ருர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். சைவ சமயாசாரியர்கள் அருளிய திருமுறைகளையே வேதங்களாகக் கொண்டு அவைகளின் பெருமையையே உணர்த்திவரும் ஸ்தாபனம் தருமை ஆதீனம். இதை நிறுவிய எங்கள் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,

"ஆசையறுய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்"

என்று அருளிச்செய்திருக்கிருர்கள். திருமுறைகளை இடைவிடாது ஓதுதலால் எல்லாப் பயன்களும் உண்டாகும் என்பது கண்கூடு.

ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் திருமுறைகளிலேயே தோய்ந்திருக்கும் திருவுள்ளம் படைத்தவர்கள். சாத்திரங்களில் ஆழ்ந்த அனுபவமுடையவர்கள். திருக்கோயில் திருப்பணிகள், மகாகும்பாபிஷேகங்கள் முதலியன நடத்தியும், ஸ்ரீ காசி இராமேசுவரம், கன்னியாகுமரி, கேதாரம், நேபாலம், அமரநாதம், இவற்றிற்கு எல்லாம் மேலாய மகாகயிலாயம் முதலிய செயற்கரிய தலயாத்திரைகளைச் செய்தும் விரதம், ஜபம், தவம், தியானம் முதலியன இடைவிடாது நிகழ்த்தியும் சிவ புண்ணியக் கருவூலமாய்த் திகழ்பவர்கள். 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்று தெய்வப்புலவர் கூறுவதற்கு ஏற்ப மொழிப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி முதலான உலகியல் தொண்டுகள் பலவற்றையும் அவ்வப்போது செய்தருளி மக்கள் எல்லோருடைய மனத்திலும் எழுந்தருளியிருப்பவர்கள்.

கடவுள் திருப்பணிகளில் இன்று ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்களை உலகம் போற்றுகின்றது. கடவுள் திருவுருவங்களுக்குத் தங்கக் கவசங்களும், ரத்னங்கிகளும் அணிவித்துக் காண்பதில் அவர்களுக்குத் தனிமகிழ்ச்சி. 'உன்னைச்

சிங்காரித்து உன் அழகைப் பாராமல் என்னைச் சிங்காரித்து இருப்பேனோ' என்ற குருஞானசம்பந்தர் திருவாக்கை அடிக்கடி நினைக்கும் இவர்கள் திருவுள்ளம். இப்படித் தெய்வங்களுக்குப் பொன்னால் கவசங்கள் செய்து சார்த்திய சிவபுண்ணியப் பெருக்கே இன்று ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானத்துக்குக் கனகாபிஷேகம் செய்வித்தது. கண் பெற்ற பயனை நாம் இன்று பெற்று மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றோம்.

'வாழ்க ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள்' என்று வாழ்த்தி இப்பாராட்டு விழா நிகழ்ச்சியைத் தொடங்கிவைக்கின்றேன். இம்மாநிலம் முழுவதும் இங்கே கூடியிருக்கிறது. அன்பர்கள் எல்லோரும் கேட்டு இன்புற்று ஸ்ரீலஸ்ரீ கயிலை மகா சந்நிதானத்தின் அருளாசியைப் பெற்று நல்வாழ்வு வாழ்வார்களாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Veeratteswaraswami Devasthanam,
Korukkai.

வெண்பா

தருமையருள் ஆதீனம் தானாட்சி செய்யும்
அருமைத் திருக்குறுக்கை ஆலயப் — பெருமைதனை
இந்நாளில் கண்டுற்றோம் இன்பத்தைக் கொண்டுற்றோம்
எந்நாதன் காக்க எமையே.

அருமைத் திருத்தொண்டர் ஆயவிவே கானந்தப்
பெருமைத் திருநாமப் பேரர் — தருமையருள்
ஆட்சியிலார் கோயில் அருமைத் திருக்குறுக்கை
மாட்சிதனைக் கண்டார் மகிழ்ந்து.

எங்கும் தனிப்பொலிவு எங்கும் எழிற்பெருமை
தங்கும் திருக்கோயில் தானாகிப் — பொங்கும்
தருக்குடனே ஓங்கித் தழைத்தொளிரும் கோயில்
திருக்குறுக்கை என்றே தெளி.

(Sd.) திருவாசகமணி

21—4—61

சிதம்பரம்

டாக்டர். திரு. K. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள்
M. B., B. S.

நிகழ்த்திய

வரவேற்புரை

கயிலை கண்ட குருமகாசந்நிதானம் அவர்கள் பொற்பாதங்கட்கு வணக்கம். நுண்ணறிவும், அருள்நிறைவும் உடைய காசிவாசி சுவாமிகள் அவர்களே! பண்புமிக்க அமைச்சர் அவர்களே! இங்குக் கூடியிருக்கும் அறிஞர்களே! செந்தமிழ்ச் செல்வர்களே! தாய்மார்களே வணக்கம். முதலில் இந்தப் பாராட்டு விழாவிற்கு எல்லோரையும் வரவேற்கும் வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு கனகாபிஷேக விழாக்குழுவினர்க்கு என் நன்றி உரித்தாகுக. தென்னாடுடைய சிவபிரான் எழுந்தருளப் பெற்ற பல திருத்தலங்களைத் தன்னகத்தேகொண்ட சோழ வள நாட்டின் காவிரிக்கரையின்கண் இறைஅருள் பெற்று எழிலுடன் விளங்கும் தருமை ஆதீனத்தில் 25 ஆவது மகாசந்நிதானமாக அருள் ஆட்சி செலுத்தும் நமது குருமணி அவர்கட்கு இன்று காலை மங்கள வாத்தியங்கள் முழங்க, நான்மறை வேதியர்களின் வேதஒலி எழ, இசையரசு திருமுறைகள் இசைக்க, உவகை பொங்கக் கூடியிருந்த சிவநேசச்செல்வர்கள் முன் இனிமை யொடும், எளிமையொடும் விளங்கும் திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிகள் அன்புடனும், பண்புடனும், பக்தியுடனும் முறைப்படி பொன்மலர்களால் அர்ச்சித்துக் கனகாபிஷேகம் செய்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பக்தர்கள் எல்லாம் மெய்ம்மறந்து குருமணியின்பால் உள்ளத்தைச் செலுத்திப் பரவசமாயினர். இது தருமை ஆதீனத்தின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கவேண்டிய பெருநிகழ்ச்சி யாகும். நாங்கள் இத்தகைய விழாவை எப்படியாவது செய்ய வேண்டும் என்று அவர்களைப் பலதடவைகள் அணுகியும் முதலில் அதற்கு இசையவில்லை. பிறகு பலபேர்களின் அன்பால் விழைகின்றதை மறுக்க மனம் வரவில்லை. அவர்கள் இறைவன் திருவருளைப் பெற்றவர்களாதலின் நாங்கள் எண்ணியதைவிட விழா மிகவும் சிறப்பாக இன்று அமைந்தது. "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" என்ற சேக்கிழாரின்

வாக்கிற்கிணங்க இன்று எல்லாம் மங்களமாக நடந்தேறியது. ஆனால் நமது குருமணி அவர்கள் தனக்குச் செய்யும் சிறப்பு, தான் அடையும் புகழ் எல்லாம் தான் நாளும்வழிபடும் செந்தமிழ்ச் சொக்கனுக்கே உரியதாகும் என்று எண்ணும் இயல்புடையவர்கள். இன்று நம் அழைப்பிற்கிணங்கி செல்வத்திலேயே பிறந்து, செல்வத்திலேயே வளர்ந்து, அயல்நாடுகளில் சென்று கல்வி பயின்று தன் அறிவையும், ஆற்றலையும், வாழ்நாளையும் நாட்டின் நற்பணிக்காகச் செலவிட்டு இப்பொழுது தமிழரையும், தமிழர் நலன்களையும் காக்க டெல்லிமாநகரில் ஆட்சி செலுத்தும் அமைச்சர் அவர்கள் இங்கு வந்து உங்கள் முன் இவ்விழாவின் அழகுக்கு அழகுசெய்வதுபோல் அமர்ந்துள்ளார்கள். கல் தோன்றி மண்தோன்றுக் காலத்திற்கு முன்தோன்றிய தமிழின் தலைசிறந்த நூலாய திருக்குறளை வையகத்திற்கு அளித்த தெய்வப்புலமை திருவள்ளுவரின் திருவுருவத்தை அஞ்சல் தலையில் அச்சிட்டுத் தமிழர்களை மகிழ்வித்த அமைச்சர் அவர்களே! தங்கள் வருகையால் நாங்கள் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறோம். தங்களை உள்ளன்புடன் எங்கள் குழுவின் சார்பாக வரவேற்கிறேன். தமிழ்நாட்டிலும், இன்னும் பிறநாடுகளில் பணியாற்றும் மருத்துவர்கள் தங்கள் குருவாக எண்ணி போற்றப்படுபவரும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாராய் சென்னைநகரில் திகழ்பவரும், சென்னை மருத்துவக்கல்லூரிப் பேராசிரியரும் ஆகிய டாக்டர் ரத்தினவேலுசுப்பிரமணியம் அவர்கள் எங்கள் அழைப்பிற்கிணங்கி இங்கு வந்துள்ளார்கள். அவர்கட்கு எங்கள் நல்வரவு உரித்தாகுக. டெல்லி முதல் குமரி வரையில் இங்கு வந்து கூடியிருக்கும் அறிஞர்களையும், பல பெரும்பொறுப்புகள் ஏற்று நிர்வகிக்கும் பெரியார்களையும், தொழில் வளர்க்கும் செல்வர்களையும், தமிழ் வளர்க்கும் புலவர்களையும், இசை வளர்க்கும் அறிஞர்களையும் இங்கு வந்து கூடியிருக்கும் ஒவ்வொருவரையும் உள்ளன்புடன் எங்கள் குழுவின் சார்பாக இருகரங்கள் கூப்பி, சிரந்தாழ்த்தி வருக வருக என்று வரவேற்கிறேன்.

இன்று நாம் எல்லோரும் சைவ மடத்தின் சிகரமாக எண்ணப்படும் தருமை ஆதீனத்தின் குருமணி அவர்களைப் போற்றிப் பாராட்ட சீடர்களாகிய நாம் கூடியிருக்கிறோம். அவர்களது அருள் ஆசியைப்பெறக் கூடியிருக்கிறோம். ஞான வாழ்வுதான் பெருவாழ்வாகும். அறிவு என்பது உலகியற் பொருளை ஆராய்வது " எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு " என்றார். இங்கு அறிவு என்பது ஞானத்தை. உலகியற் பொருள்களை

ஐயம்திரிபற அறிவதற்கே குருவின் துணையன்றி முடியாது. அது கலையாயினும், கணிதமாயினும், சரித்திரமாயினும், மருத்துவமாயினும் குருவின்றி கற்கமுடியாது. அப்படி இருக்க ஆதியும் அந்தமும் இல்லாத காலத்திற்கும், கருத்திற்கும் அப்பாற் பட்ட ஒரு பொருளை அறிய அவனது அருளைப்பெற குரு எவ்வளவோ அவசியம் ஆகும் அல்லவா? குருவின் மூலம்தான் இறைவன் அருள்புரிகிறார்.

நம்மினும் செல்வத்தாலும், வளத்தாலும், கல்வியாலும், பண்பாலும் சிறந்த மேல்நாட்டு மக்கள் தங்கள் மதகுருவினிடம் அளவுகடந்த பக்தி கொண்டுள்ளார்கள். 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை' என்றார் வள்ளுவர். "செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்" என்றார் ஞானசம்பந்தர். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவு" என்றார் குமரகுருபர அடிகள். எந்தச் செல்வம் எப்படி ஆயினும் நாம் அன்புடையராய், அருள் நிறைந்தவராய், மனத்துக்கண் மாசிலராய், தியாகசிந்தனையுடன் இங்கு அன்பும் அருளும் உருவாய் தெளிந்த ஞானத்துடன் அமர்ந்திருக்கும் நமது குருமாமணியாகிய செல்வத்தை சிந்தையினுள் இருத்தி அவரது திருவடிகளை மலர்களால் அர்ச்சித்து அவரது அருள்மொழிகளை மந்திரமாகக்கொண்டு வையத்துள் பெறுவனவெல்லாம் பெற்று இனிது வாழ்வோமாக.

முருகன் துதி

வேளூர், க. சோக்கலிங்கம்.

இராகம் - பிலஹரி] [தாளம் - ஆதி

பல்லவி

துள்ளிக்குதித்தோடி வந்தான் — தோகை
வள்ளிமுலைதோயும் வடிவேலன் என்பான் (துள்)

அனுபல்லவி

புள்ளிமயிலேறும் புனிதன் புனம்சென்று
அள்ளித் தினைமாவை ஆர்வமோடுண்டான் (துள்)

சரணம்

நள்ளிருள் தூதுசெல் நாதன் திருமகன்
பள்ளிகோள்வான் திருமாலின் மருமகன்
புள்ளூரமர்ந்து எப்போழுதும் அன்பர்மனத்
துள்ளூரும் சொற்கேட்டு உள்ளம்மகிழ்வான் (துள்)

பாராட்டுரைகள்

திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் M.A., M.L.C.,

திருக்கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது பொன்னூர் திருவடிகளுக்கு வணக்கம். பெரியோர்களே! தாய்மார்களே! இன்றைய விழா தமிழகம் இதுவரை காணாத ஒரு புதுமை. பாரத நாட்டு மக்கள் ஒரு சமயக் கூட்டத்தில் ஒருங்கே இத்தனைபேர் திரளாகக்கூடிய ஒரே ஆர்வமுள்ள கூட்டத்தைத் தென்னாடு கண்டதேயில்லை. அதற்கு முக்கியகாரணம் என்னவென்றால் எனக்குத்தெரிந்தவரையில் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் செய்துவருகின்ற தெய்வப்பணியே ஆகும். குருமகாசந்நிதானம் அவர்கள் தெய்வப்பணியில் மக்களை எவ்வளவுதூரம் ஈடுபடச் செய்திருக்கின்றார்கள் என்பது நன்கு புலனாகிறது. குருமகா சந்நிதானம் அவர்கள் கயிலை யாத்திரை செய்யவேண்டுமென்று திருவருள் கொள்வதற்கு முன்னரேயே கேதாரநாத், பசுபதிநாத், அமரநாத் போன்ற ஸ்தலங்களுக்குச் சென்று அந்த யாத்திரை களிலுள்ள கஷ்டநஷ்டங்களை அவர்கள் நன்கு உணர்ந்திருக் கின்றார்கள். ஆனால் நம்மனோர்க்கு அத்தகைய அனுபவங்கள் இல்லாமல் இதைப்போன்ற மிகவும் சிக்கலான ஒரு யாத்திரையை மேற்கொள்ளுவதற்குத் துணிவு வரவேவராது. மகாசந்நிதானம் அவர்கள் இந்தக் கயிலை யாத்திரையை மேற்கொண்டு இந்தப் பீடத்தில் வந்து அமர்வதற்கு முன்னரே குருமகாசந்நிதானங் களின் அற்புதங்கள் போன்றே இதுவும் ஒரு அற்புதமென்றே கருத இடமிருக்கிறது. அதோடுமட்டுமல்ல. குருமகாசந்நிதானம் அவர்கள் நிர்வாகத்தின்கீழ் இருபத்தேழு தேவாலயங்கள் இருக் கின்றன. குருமகாசந்நிதானங்களை நோக்க அந்த இருபத்தேழு தேவாலயங்களும் இருபத்தேழு நட்சத்திரங்களாக இந்நாட்டில் திகழ்ந்துகொண்டிருக்கின்றன.

குருமகாசந்நிதானம் அவர்கள் செய்கின்ற முறைகள் சொல் லாமலேயே எதைச் செய்யவேண்டும் என்று என்னைப்போன்ற தர்மகர்த்தகர்களுக்குக் குருமகாசந்நிதானம் அவர்கள் சொல்வது போல் அமைந்திருக்கின்றது. குருமகாசந்நிதானம் அவர்கள் கயிலை அனைய செந்திலில் எழுந்தருளியிருக்கும் செந்திலாண்டவ னைத் தரிசிக்க ஆண்டுதோறும் வருவார்கள். ஒருவாரம் - பத்து நாட்கள் அங்குத் தங்குவார்கள். அந்தச் சமயங்களில் எல்லாம்

குருமகாசந்நிதானம் அவர்கள் உரையாடல் அத்தனையும் சமய வளர்ச்சிக்குள்ள கருத்துக்களை, அறிவுரைகளை எடுத்தியம்பி அப்பணியில் ஈடுபட்டிருக்கும் அத்தனைபேரையும் ஊக்குவிப் பதோடுமட்டுமல்லாமல் எங்களது குறைகளை அவர்கள் பெருமைப் படுத்தியே எடுத்துக்கூறி இன்னின்னவிதத்தில் திருந்தவேண்டு மென்ற முறைகளை அடிக்கடி சொல்லிவருவார்கள். ஆகவே, அத்தகைய ஒரு மனப்பான்மையோடு எல்லாரோடும் காட்சிக் கெளியோராக - பலரும் பாராட்டக் கூடியவர்களாக அவர்கள் பழகுகின்றமுறையில் அந்தத்துறையில் ஆற்றலற்ற ஒருவனுக்கும் கூட அவர்கள் ஆற்றலை வரவழைத்து அந்தப் பணியைச் சிறந்து செவ்வனே செய்வதற்குரிய ஒப்பற்ற அருளையும் மகாசந்நிதானம் அவர்கள் வழங்குகின்றார்கள். ஆகவே செந்திலாண்டவன் அருள் அவர்களுக்குப் பரிபூரணமாக இருந்து அவர்கள் சமயச்செங் கோலோச்சிப் பல்லாண்டு வாழவேண்டும்.

நமக்கு ஆலயங்கள் எல்லாம் எப்படி கலங்கரை விளக்கமாக விளங்குகின்றனவோ அதேபோல் குருமகாசந்நிதானம் அவர்கள் விளங்குவதற்குச் செந்திலாண்டவன் நீடிய வாழ்வையும் அரோக திடகாத்திரத்தையும் அருளவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு குருமகாசந்நிதானம் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பாலசுப்பிரமண்ணிய அய்யர் அவர்கள் B. A., B. L.,

கயிலாய பரம்பரை மகாசந்நிதானம் அவர்களுக்கும், காசி வாசித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்றைய தினம் நான் பார்த்த ஒரு காட்சி எல்லோரும் என்றைக்கும் மறக்க முடியாத ஒரு காட்சி. அதை நினைக்கும்போது எனக்கு மகிழ்ச்சி யினால் பேசக்கூட முடியாதுபோல் தோன்றுகிறது. இருந்தாலும் முயற்சிசெய்து பேசுகிறேன். நாம் எல்லோரும் இங்கே தருமபுரத் திற்கு வந்து தங்கி இந்தத் தங்க அபிஷேகத்தைப் பார்த்த பிறகு நமக்கு வினை தங்குமோ? ஒருநாளும் தங்காது. அதைத்தான் நான் முதலில் நினைத்து ஆனந்தப்படுகிறேன். இத்தகைய ஒரு விழாவானது இந்தக்காலத்தில் நடக்குமா என்று நான் நினைத் திருந்தேன். இது நடக்காதென்றுகூட யாராவது என்னிடம் சொல்லியிருந்தால் நானும் நடக்காது என்றே சொல்லி தலையை ஆட்டியிருப்பேன். ஆனால் இப்போது இந்த விழா சிறப்பாக

நடைபெறுவதைப் பார்க்கும்போது சிறப்பாக நடக்கும் என்று தான் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. இன்றைக்குக் காலையில் பார்த்த ஒரு காட்சியை என்னவென்று சொல்வது ! !

திருக்கயிலாய யாத்திரை செய்து கயிலாயத்து உச்சியுள் ளானைப் பார்த்துவிட்டு அதற்குப் பிறகு தருமபுரத்தில் வந்து தங்கி நம் கண்களுக்கு உள்ளேயிருக்கும் அந்தக் கடவுள்போல் உள்ளவரை நாம் என்னவென்றுசொல்வது ! அப்பர் சுவாமிகள் சொன்னார்கள் - "கயிலாயத்து உச்சியுள்ளான் காளத்தி யான் அவன் என் கண்ணுளான்" என்று. கயிலாயத்தில் இருந்தவன் காளத்தியில் எழுந்தருளியிருந்து கண்ணுக்குள்ளே வந்துவிட் டான். அதாவது காட்சியாற் கண்டு மனதிற்குள் நிறைந்து நின்றுவிட்டான். இப்போது அதேபோல் கயிலாயவாசியை (சிவபிரானை)த் தரிசித்துவிட்டுத் தருமபுரத்தில் வந்திருந்து நம் கண்ணுள்ளே வந்தவர்களை நாம் என்னவென்று சொல்வது ? அதை நான் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன். ஸ்ரீலஸ்ரீ காசி வாசித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அந்தப் பாட்டைச் சொன்னார்களே என்றுதான் ஆனந்தப்படுகிறேன்.

திருப்பனந்தாள் பெரியார் அவர்கள் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு அர்ச்சித்ததை இன்று நாம் பார்த்தோம். அந்த ஆச்சரியத்தை என்னவென்று சொல்வது ? மடங்களுக்குள்ளே இருக்கிற ஒற்றுமையையும், மடாதிபதிகள் சேர்ந்து சமயத்துக்குச் செய்கின்ற தொண்டையும் பார்க்கும்போது 'மடாதிபதிகள் உங்களில் சேர்க்கை இல்லையென்று சொல்லுகிறார்களே' அது தப்பல்லவா என்று கேட்கவிரும்புகிறேன். அப்போது வள்ளலார் கோயிலில் நடந்த ஒரு காட்சியும் ஞாபகத்திற்கு வருகின்றது. காமகோடிபீடம் ஸ்ரீமத் ஆசாரிய சுவாமிகளை வள்ளலார்கோயி லுக்கு வரவேற்று உபசரித்ததையும், அவர்கள் தருமபுரத்திற்கு வந்து குருமகாசந்நிதானத்தைக் கண்டு சென்றதையும் நினைவு படுத்திக்கொண்டு மகிழ்கின்றேன். பெரியோர்கள் எல்லாம். மடாதிபதிகள் எல்லாம் சேர்ந்து நம்முடைய சமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி. பண்பாட்டு வளர்ச்சி எல்லாவற்றையும் சேர்த் துச் செய்கிற நிலையிலே அவர்கள் இந்த உலகத்திலே அன்பைப் பாராட்டி, சைவத்தை எங்குபார்த்தாலும் நிலைநாட்டிவருவார்கள் என்பதில் ஐயமில்லை. அன்பேசிவம். அன்பும், சிவமும் வேறு என்று சொன்னால் தெரியாதவர்கள் என்று திருமூலர் அருளிச் செய்தார். அன்புதான் சிவம். வேறு என்று சொல்லுபவர்கள் தெரியாதவர்கள். அத்தகைய சைவத்தை எங்கு பார்த்தாலும்

பரப்பப் பல தொண்டுகளைச் செய்யும் இந்த நற்பணிகளே (ஞானசம்பந்தம் என்ற பத்திரிகையிலே ஆச்சாரிய சுவாமிகள் சொன்னதாக இருக்கிறது.) எதிரொலியாகக் கனகாபிஷேகமாக வந்தது. 'ல' வுக்கும் 'ள' வுக்கும் வித்தியாசம் தெரியாதவன் அது 'எதிரொலி' அல்ல; 'எதிரொளி' என்றுதான் சொல்ல வேண்டும். அந்த நற்பணிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அது ஒரு ஒளியாக அப்படியே வந்து அந்தப் பொன்மேனியில் இருக்கும்படியாக பொன்னுக்குப் பொன் அளித்தோம். அவரே பொன் மேனிதான். அவர்கள் பொன்மேனியானைத்தான் பார்த்துவந்திருக்கிறார்கள். கயிலை மலையிலுள்ள பொன்னார்மேனியனின் அருளைப்பெற்று நமக்கு அளிப்பதற்காக குருமகாசந்நிதானம் அவர்கள் யாத்திரை செய்துவந்திருக்கிறார்கள்.

நாம் போக்குவரத்து மந்திரிகள், அதிகாரிகள் எல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். போக்குவரத்துக்குப் பலம் தேவையாக இருக்கிறது. அந்தப் பலத்தைக்கூடக் கருதாமல் கயிலை யாத்திரை செய்து, எங்கெங்கு சைவ ஸ்தலங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் சென்றுவந்த குருமகாசந்நிதானம் அவர்களுக்கு இன்றையதினம் நடைபெற்ற கனகாபிஷேகமானது மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது. குருமகாசந்நிதானம் அவர்களது பணிகளைப்பற்றி இந்த மலரிலே என்னை எழுதச் சொன்னார்கள். பல பணிகளை ஞாபகம் வைத்து எழுதினேன். இன்னும் சில பணிகளை விட்டிருப்பேனோ என்றுகூட நினைக்கிறேன். நம்முடைய தலைநகரிலே பல பணிகளைச் செய்துவருவதை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அங்குக் கலந்திருக்கும்படியான வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. பெரிய நூல் நிலையங்கள் வைத்திருக்கிறார்கள். ஞானசம்பந்தருடைய தேவாரங்களையெல்லாம் அழகானமுறையில் அச்சிட்டு எல்லாரும் படிக்கும்படி சுலபமான விலையில் வெளியிட்டிருக்கின்றார்கள். பல உயர்ந்த நூல்களையெல்லாம் அச்சிட்டிருக்கிறார்கள். சிவஞான போதம் முதலிய சாத்திரங்கள் நன்றாக அச்சிடப்பட்டிருக்கின்றன. திருக்குறளின் எல்லாவிதமான உரைகளையும் சேர்த்து அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். எல்லா க்ஷேத்திரங்களையும் வழிபாடு செய்வதற்கான நூல்களையும், அனுஷ்டான முறையைப்பற்றிய நூல்களையும் வெளியிட்டிருக்கின்றார்கள். இதுபோன்ற பல உயர்ந்த தொண்டுகளை குருமகாசந்நிதானம் அவர்கள் செய்து வருகிறார்கள்.

"ஞானசம்பந்தம்" என்ற பட்டமே ஒரு அழகான பட்டம். அதிலே மொழிப்பிரச்சினையைக் காணோம். நம்முடைய மனதிலே

தான் மொழிப்பிரச்சினைகள் எழுகின்றனவே தவிர அங்கே மொழிப்பிரச்சினை இல்லை. அப்படி அழகாக எல்லா மொழிகளுடைய பெருமையையும், முக்கியமாகத் தமிழ் மொழியினுடைய பெருமையையும் நன்றாகக் காட்டும்படியான அப்பேர்ப்பட்ட பத்திரிகையையும், இன்னும் பல பணிகளையும் சமயத்திற்கும், தமிழ்ப்பண்பாட்டுக்கும், நாகரிகத்திற்கும் அவர்கள் செய்துவரும் தொண்டு மெச்சத்தக்கது. சமயத் தொண்டுதான் இன்று இருக்கும்படியான நிலைக்கும், நாம் படும் கஷ்டங்களுக்கும் உலகம் இருக்கும்படியான ஒரு அல்லோலகல்லோல நிலைக்கும் பெரிய திருத்தொண்டு, அத்திருத்தொண்டாற்றி வரும் தருமபுர ஆதீனத்தை மெச்சுவது இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அதை எல்லாரும் சேர்ந்து ஒன்றாக ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய ஆதீனத்தில் இருக்கும்படியான பெரியவர்களுக்கு அந்தக் கயிலைநாதர் தம்முடைய திருவுள்ளத்தில் நன்றாக நினைந்து பல்லாண்டு இருக்கும்படியாகச் செய்து நம்முடைய சமயத்துக்கும் தமிழ் பாஷைக்கும் எல்லாக் கல்விகளுக்கும் பல தொண்டுகளை மேலும் மேலும் செய்து கனகாபிஷேகத்திற்குப் பிறகு வைராபிஷேகம் பண்ணவேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. காசிநாததுரை அவர்கள்

கயிலைக் குருமகாசந்நிதானத்தின் பொன்னர் திருவடிகளுக்கு என் நெஞ்சம் கலந்த அஞ்சலியை முதலிலே சொல்லிக்கொண்டு தலைமுறை தலைமுறையாக இந்தச் சைவ மடங்களுக்குத் தங்களால் இயன்ற உதவியையும் செய்து ஊழியம் செய்துவந்த ஒரு குடும்பத்தின் சார்பாகவும் அந்தக் குடும்பத்தின் தலைவராக வந்திருக்கின்ற சேதுபதி அவர்கள் சார்பாகவும் அஞ்சலி தெரிவித்துக்கொள்கிறேன். இது சோழ தேசமாக இருப்பதாலே, எங்களுடைய பாண்டியநாட்டைப்பற்றி ஒருவார்த்தை சொல்ல பிரியப்படுகிறேன். பாண்டியநாடு, ஏனைய சமயங்களும் வாழலாம், ஆனல் மிஞ்சக் கூடாது என்ற ஒரு நியதி உள்ள நாடு. அக்காரணத்தாலேதான் ஞானசம்பந்தப்பெருமான் சைவத்திற்கே நாற்றுப்பாவ வேண்டிய ஒரு இடமாகக்கருதினர். ஏனைய சமயங்கள் மிஞ்சமுயன்ற காரணத்தினல் அங்கு எழுந்தருளிவந்து ஞானம் புகட்டிய நாட்டின் ஒரு பகுதியின் சார்பாக நம் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் செய்துவருகின்ற தொண்டைப் பற்றி அடியேனையும் ஒரு சில வார்த்தைகள் சொல்லக் கட்டளை இட்ட காரணத்தினலே வந்ததேதவிர அவர்களுடைய புகழைக்

குறிப்பாக சோழதேச மக்களுக்கு யான் எடுத்துச்சொல்வ தென்ருல் அதுமுறையல்ல. என்போன்ற சைவப்பற்ருே அல்லது சைவப்பித்தோ உள்ளவர்களுடைய கனவில்மட்டும், எல்லாச் சமயங்களும் வளரவேண்டுமென்ருல் சைவமும் நல்ல முறையில் வளர்க்கப்படவேண்டுமென்று தான் அடிக்கடி தோன்றுகிறது. நாஸ்திகம்கூட உயிருடன் வாழவேண்டுமென்ருல் சைவம் வளர்ந் தால்தான் வளரமுடியும். இல்லாவிடில் நாஸ்திகத்திற்கு உரம் இருக்காது. அப்படிச் சொல்லும்போது ஏனைய நாடுகளிலுள்ள சமயங்கள் சம்பந்தப்பட்ட பெருங்கூட்டங்களை இந்த நாட்டிலேயும் நாம் பார்க்கின்ருேம்.

நான் ஏனைய சமயங்களைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப் பிரியப் படவில்லை. எல்லா நாடுகளிலும் அந்தந்த சமயத்தின் சார்பாக பெரும் பெரும் கூட்டங்கள் நடந்துவருவதைப் பார்க்கிருேம். இதேமாதிரி இங்கு எழுந்தருளியிருக்கும் சிவஞானபீடத்தில் செங் கோல் செலுத்திவருகின்ற நமது குருமகாசந்நிதானம் போன்ற மகான்களின் விழாக்கள் ஏதோ இந்தத் தமிழகத்திலே - சோழ தேசத்திலேமட்டும் இப்படி இருந்தால் போதாது. கடல் கடந்த நாடுகளிலே, அமெரிக்காவிலே, ரஷ்யா போன்ற நாஸ்தீகம் பரப்பும் நாடுகளிலே, மற்றும் கிழக்கிந்திய நாடுகளிலேயெல்லாம் சைவக் கூட்டங்களாக அவர்களும் மாறி கயிலைக் குருமகா சந்நிதானம் போன்றவர்கள் அங்கெல்லாம் சிறப்படைந்தால் என்போன்றவர்கள் நேரிலே அந்தக் காட்சியைப் பார்க்க முடியா விட்டாலும் பத்திரிகை வாயிலாகவாவது அறிந்துகொள்ளும் நன்னுள் எங்கள் ஆயுட்காலத்தில் வரவேண்டுமென்பதுதான் என்போன்ற எளியோர்களின்கனவு. குருமகா சந்நிதானம் அவர்கள் சைவத்தை உலகெலாம் பரப்பி வையம் துயர் தீர அரனுருடைய நாமம் போற்றவேண்டும். மேன்மையுடைய சைவ நீதி உலகெலாம் விளங்கவேண்டும். அதற்கு நமது கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பல்லாண்டு இப்புவியில் வாழ்ந்து சைவம் உய்ய வழிகாட்டவேண்டுமென்று சொல்லி சேது குடும்பத் தினரில் ஒருவரான என்னுடைய தமையனுர் சார்பாகவும் இந்தப் பொன்னுடையை சுவாமிகள் அவர்களுக்குச் சூட்டுகின்றேன்.

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்
M. A., M. O. L., B. L.

திருக்கயிலை குருமகாசந்நிதானத்தின் பொன்னுர் திருவடிக் கமலங்கட்கும் அவர்களைப் பொன்னுல் இன்று அர்ச்சித்த தவப் பெருமகனுராகிய காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களது பொன்னூர் திருவடிக் கமலங்கட்கும் என்னுடைய பணிவான வணக்கங்கள்.

இளங்கோவடிகள் ஒரு அழகிய சொற்றொடரைத் தமிழுக்குக் கொடுத்துள்ளார் " கண்கொள்ளாக் காட்சி " என்று. அதற்குப் பொருள் என்னவாய் இருக்குமென்று நான் பலநாள் எண்ணிப் பார்த்ததுண்டு. ஆனால் அந்த அழகிய பழைய இனிய தமிழ்ச் சொற்றொடரின் பொருளை இன்று காலையிலேதான் நான் கண்டேன். எனக்கு ஒரு அச்சம். இந்தத் தமிழ் நாட்டிலே சமய மென்றெல்லாம் சொல்லுகிறார்களே; அந்த சமயத்தில் மக்களுக்கு ஈடுபாடு உண்டோ என்ற ஐயப்பாடு இருந்தது. சமயத்திற்குத் தக்கவாறு நடந்துகொள்வது உண்டோ? சமயமென்று அந்தக் காலத்திலிருந்து சொல்லிவருகின்றோமே அந்த உயர்ந்த நோக்கத் திலே மக்களுக்கு இன்று நம்பிக்கை ஆர்வம், ஈடுபாடு இருக் கின்றதா என்ற ஓர் ஐயம். ஆனால் உண்மையில் நான்தான் இந்தத் தமிழ் நாட்டிற்கும் தமிழ் நாட்டிலே வாழ்ந்து வருகின்ற சமுதாயத் திற்கும் என்னுடைய நெஞ்சாலும், மனத்தாலும் ஊறு செய்து விட்டேனென்று உண்மையில் இன்று குருமகாசந்நிதானத் திற்குத் தெரிவித்துக்கொண்டு கழுவாய் இயற்றவேண்டிய நிலையி லிருக்கின்றேன்.

இத்தனை மக்களும் ஒருவேளை அந்தப் பொன்முழுக்கைப் பார்க்கத்தான் வந்தார்கள் என்றால் இன்று மாலையிலும் பெருங் கூட்டம் கூடியிருக்கிறது. ஆகையால்தான் அவர்கள் கயிலையைப் பார்த்துவந்தவுடன் அந்தப்பலன் நமக்கெல்லாம் இங்குவளமாகப் பாய்ந்திருக்கிறது. முன்னே சொல்வார்கள் - குருமார்கள் செய்கிற தவத்தின்பயன் அவர்களுக்காக அன்றி இந்த உலகத்திலே வாழ்கின்ற எல்லோருக்குமென்று. அந்த உண்மையை இன்று நேரில்கண்டு உணருகின்றோம். ஸ்ரீலஸ்ரீ காசிவாசித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பூசை செய்தார்கள். தன்னை மறந்து பூசையிலே ஈடுபட்டு எதிரே கயிலை இறைவனைத் தான்காணுகின்ற நிலையிலே இருந்துகொண்டு அவர்கள் செய்த வழிபாட்டைக் கண்டபோது வழிபாடு என்பதன் பொருள் அப்படித்தான் இருக்குமென்று தெரிகிறது.

தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் மிகச்சிறந்தசந்நிதானம், ஏன் ? குமர குருபரரை - உலகத்திலெல்லாம் சைவத்தைப் பரப்பிய அந்தப்பெருமகனை, தன்னுடைய மடாலயத்திலே குருசீடபரம்பரை யிலே வளர்த்ததினாலே வடக்கு உயருகிறது. ஒரு குமரகுருபரர் அங்குச் சென்று இந்த சைவத்தின் பெருமையை அங்கு பரப்பியதா னல் போலும்! ஆனால் அது வளர்ந்தால் அந்தப் பெருமகன்

வாழ்ந்தால் இன்று அந்தப் பரம்பரையிலே இருக்கின்றவர்கள் தொண்டாற்றிய இந்தத் தமிழ்நாடு வாழாதுபோகுமா? இன்று காலையில் கண்ட காட்சி இத்தனையும், தமிழ்நாடு வெளிவகையில் மட்டுமின்றி ஆன்மீகத்துறையிலேயும் மிகமிக வளருகின்றது என்பதையே நாம் காண்கின்றோம். அவர்கள் செய்துவருகின்ற தொண்டுகளையெல்லாம்பற்றிச் சொன்னார்கள் இன்று நாங்கள் அடியார்க்கு அடியார்களாக இருக்கின்றோம். அந்தக் குருமகா சந்நிதானத்தின் அடியார்க்கு அடியார்களாக நின்றுதான் நாங்கள் பேசவேண்டி இருக்கிறது. அவர்கள் (ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள்) செய்துவருகின்ற தொண்டு பெருந்தொண்டு. அந்த மடத்தின் பொருள்களையெல்லாம் கட்டளைகளாக வரை யறுத்து வரையறுத்து வாரி இறைக்கின்ற அந்தப் பெருந் தன்மையை நினைக்கும்போது இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் அப்படித்தான் செய்யவேண்டுமென்று வழி காட்டுவதுபோலத் தோன்றுகிறது. அதுவும் எங்களுடைய கயிலைக் குருமகா சந்நிதானத்தின் பேரருளின் திறமே என்று போற்றுகின்றேன்.

எத்தனையோ பெருமக்கள் பேச இருக்கின்ற நிலையில் அடியேனையும் ஒரு பொருட்டாக இங்குப் பேச இடமளித்த திருவருளுக்கும் குரு மகா சந்நிதானத்தின் திருவருளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கருணைசெய்குவாய்!

ஈழம். க. உமாமகேஸ்வரன்

இராகம் - இந்தோளம்] [தாளம் - ஆதி

பல்லவி

கருணை செய்குவாய் கமல வாணியே
கலைகள் யாவையுங் காக்கும் ராணியே. (கருணை)

அனுபல்லவி

மலர்கள் தூவியுன்னை வாழ்த்தினேனேன் தாயே
நலங்கள் யாவும் நீடுநல்குவாயே நீயே. (கருணை)

சரணம்

பூவினின்றும் போந்து புன்மையேன்பால் வந்து
நாவில்நீ யிருந்து நல்லகவி தந்து
காவியத்தி லின்பங் கண்டுதுய்க்க வேண்டும்
ஆவிநேருந் தமிழ் அன்னையோங்க யாண்டும். (கருணை)

* "மனக்கோயில்" *

வித்துவான், ம. சிவசம்பு

(மலர் 20, இதழ் 5, பக்கம் 300 இன் தொடர்ச்சி)

காட்சி 7

இடம் : கைலாசநாதர் கோயிலில் ஒரு மண்டபம்

பாத்திரங்கள் : இராசசிம்மன் ; தண்டி ; காவலர்கள் இருவர்.

காட்சி விளக்கம்

[கைலாசநாதர்கோயில் அமைந்திருக்கின்ற முறையைத் தண்டி புகழ்தல் - இராசசிம்மன் மகிழ்ந்து, இக்கோயிலை கலைக் கூடமாக ஆக்கவேண்டும் என்று ஆசைப்படுதல் - தண்டியிடம் தன் திட்டங்களைச் சொல்லுதல்]

தண்டி : இராசசிம்மா - கோயில் நல்லமுறையில் உருவாகி விட்டது. நீ நினைத்தபடி திருக்கயிலாயம் போன்றே இருக்கிறது. கோயிலின் எதிரே அமைந்திருக்கும் திருக்குளமும் நந்தியும் கயிலைமலையில் இருக்கின்ற மானஸஸரோவர தீர்த்தத்தையும், நந்திமலையையும் நினைவுபடுத்துகின்றன. எல்லாப் பணியும் முடிந்துவிட்டால் இது பூலோககைலாசம் தான்.

இராசசிம்மன் : புலவர் பெரும! எல்லாம் தங்கள் ஆசியால் தான் நடக்கிறது. தாங்கள் தொடங்கிவைத்த திருப்பணி தானே. இக் கோயிலில் கயிலைநாதனின் அருள் வெள்ளத் தோடு கலையாகிய அறிவு வெள்ளமும் கலக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

தண்டி : என்ன சொல்லுகிறாய் இராசசிம்மா.

இராசசிம்மன் : காஞ்சி கயிலாசநாதர் கோயில் பல்லவர்களின் கலைக்கூடமாகத் திகழவேண்டும் என்பது என் ஆசை. இசையாய் இன்னமுதாய் இருக்கின்ற இறைவனின் ஆனந் தக் கூத்தைச் சிற்பங்களில் அமைக்கவேண்டும். என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட 'குஞ்சிதநடனத்தை'க் கல்லில் கண்டு வணங்கப் போகிறேன். விஞ்சையர்கள் யாழ் வாசிக்கின்ற தோற்றத்தையும், பல வரலாற்று நிகழ்ச்சி களையும் சிற்பமாக அமைக்கலாம் என்று நினைக்கிறேன்.

தண்டி : நல்ல யோசனை இராசசிம்மா. இவற்றை எல்லாம் அவசியம் செய்யவேண்டும். இக் கலைகளிலிருந்து நீ இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலியவற்றில் பேரறிவு படைத்த பெருவேந்தன என்பது உலகு அறியும் அல்லவா?

இராச : மன்னிக்கவேண்டும்; பெரும! நான் புகழ் கருதி இதை எல்லாம் செய்யவேண்டும் என்று நினைக்கவில்லை. என் கலை ஆர்வம் இவ்வாறு பேசச் செய்துவிட்டது.

தண்டி : பரவாயில்லை. உன் உள்ளம் எனக்குத் தெரியாதா? எல்லோரையும்போல நீயும் புகழ் கருதித்தான் இதை எல்லாம் செய்கிறாயா என்பதைச் சோதிப்பதற்காகச் சொன்னேன்.

இராச : எனக்குப் பேரும் புகழும் வேண்டாம் நான் உண்மை யான கலைத்தொண்டும் தெய்வத் தொண்டும் செய்தால் போதும்.

(முகம் வாட்டத்துடன் இருக்கிறான்)

தண்டி : நான் சொன்னதற்காகவா வருந்துகிறாய். நான் விளை யாட்டாகச் சொன்னேன். உன் ஆர்வத்தைக் கெடுத்து விட்டேன். இராசசிம்மா உன் ஆசை எல்லாம் என்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப்போகிறாய்.

இராச : பெரும, நல்ல கருத்துக்களை, கதைகளை கல்லில் வெட்டிவைத்து கல்லும் கதை சொல்லும், கவிதை பாடும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டப்போகிறேன்.

தண்டி : அப்படி என்ன கருத்துக்கள் வைத்திருக்கிறாய் ?

இராச : கோயில் மாடங்களில் இறைவன் முப்புரம் எரித்த வரலாறு, பாற்கடல் கடைந்த வரலாறு - காலனைக் காய்ந்த வரலாறு, பரமன் - பார்த்திபன் போர், இராவணன் கயிலை மலையைப் பேயர்க்கும் காட்சி இவற்றை எல்லாம் சிற்பங்களாக அமைக்கப் போகின்றேன்.

தண்டி : நல்ல கதைகள்தாம்! நாட்டுக்குத் தேவையானவை தான். இன்னும் என்னென்ன செய்யப்போகிறாய்.

இராச : அம்மை அப்பர் திருமணக்காட்சியையும், பராசக்தியின் ஏழுவகை உருவங்களையும் ஓரிடத்தில செதுக்கச் சொல்லப் போகிறேன்.

தண்டி : இராசசிம்மா, "வாழ்வு சிறிது - வளர்கலை மிகப் பெரிது" என்பதை நன்கு அறிந்துகொண்டாய், பிறவியின் பயனை உணர்ந்துவிட்டாய். வளர்க உன் கலைத் தொண்டு. ஓங்குக தெய்வத் தொண்டு. (தொடரும்)

வடிவேலன் துணை

புதுடில்லி, T. B. சித்தலிங்கையா

இராகம் - நடபைரவி] [தாளம் - திரிபுடை

பல்லவி

வைதாரையும் வாழ்த்தும் வடிவேலனே
புள்ளிமயில் வீரனே என்றும் (வை)

அநுபல்லவி

நீதான் துணையென்று நம்பின பேரைக்
காவா தொழியாய் கந்தா சரணம் (வை)

சரணம்

பொய்தான் துணையென வாழுமிவ் வுலகில்
மெய்யாம் நின்னருள் வேண்டும் அடியவர்
நையா திருந்து நன்மை பெறவே
செய்யாய் செந்தூர்வாழ் சித்தா மிகவே. (வை)

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

(மலர் 20, இதழ் 5, பக்கம் 302 இன் தொடர்ச்சி)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

அமுதால் வளைத்துக் கடனஞ்சை
　　யடக்குந் தடங்க ணம்பிகையே
யெமதா குயிருக் குயிராகி
　　யிருந்தா னீச னுனையிருவா
நமதா யிருக்குஞ் சிவஞான
　　நாட்டங் கொடுப்பா னுனையன்றித்
தமதா யவனைத் தேடுவதென்
　　தாயே சலித்தேன் தமியேனே. 87

ஏனென் றடியேன் றுயரகல
　　வேழுந்தாற் குறையோ வீழுக்காமோ
நானென் றிரங்கிக் கிடந்துழைத்தா
　　னன்றோ வெங்க ளுயகமே
யூனென் றிருண்ட வினைக்கூட்டி
　　னுள்ளே வருத்த மொழியாதோ
வேனென் றுரைத்தா யுணருநெறி
　　யீந்தா யெமைவந் தேடுப்பாயே. 88

ஏழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

எடுக்கவிட்ட குறைவந்து சற்குருவி னுருவ
　　மாகி யேளியே னைநீ
முடுக்காட்ட மிடுபாத மேவுதொழின் மூட்டு
　　வன்னி கருப்பூ ரமா

யடுக்கவிட்ட வினையாவும் வேந்தோழிய வந்த
ரங்க மதுதந் துபோ
நடுக்கவிட்ட விடமுண்ட சங்கரனை நண்ணு
மங்கை யிதுநன் றரோ. 89

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

நன்றென்று தீதென்று நானென்று போய்யாகி
நாளுங் கழிந்தோ டவே
நானென்று கோண்டன்ன மேனென்று பேசாது
நன்குன்ன டுறங்க லானே
னின்றென்று கூடுவது நிலையான ஞானங்க
ணின்க ருணையா லல்லவோ
நீலிகர காபாலி நின்மாயை யன்றியோரு
நேரங் கள்சே ருங்கோலோ
குன்றென்றி ரண்டுமுலை யோன்றென்ற பாதியிற்
கோமா னுறைந்த குயிலே
கோள்ளாத பேராசை கோண்டான் மருந்தேனக்
கூறு வதுநின் போதமே
யேன்றென்று செல்வங்கோ ளிருபாத மேவியவை
யேன்சிர மிறைஞ்ச வைப்பாய்
யேழில்பரவ வரியதோரு வேதாந்த ஞானியேன்
னிருவிழிக் கரிய மணியே. 90

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

மணிநிற மனைய மடப்பாவாய்
வளரோளி விழியின் மதிப்பாவாய்
துணிவுறு மனதை யளிப்பாவாய்
துரியவ தீத நடிப்பாவாய்
தணிவிலி யேனது தளிர்ப்பாவாய்
சரணம தேனது தரிப்பாவா
யணிமுழு நீறை யளிப்பாவா
யரகர நாமி யகப்பாவாய். 91

ஞானா யடியே னிருளறுக்கப்
    பகர்ந்தாய் சரணம் பரிதிமதி
யாவாய் சரணஞ் சராசரங்கட்
    கன்னே சரண மம்பிகையே
கூவாய் சரண மெனையானக்
    குறிப்பாய் சரணங் கொடுப்பாயே
ஜீவ வேனத்தா னருள்புரிந்தா
    லுமையே சரண நிலைபெற்றேன். 92

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

நிலைபெற் றேயுனை மலமற் றேபுகழ்
    நிருபங் தாபத ரடிதேடித்
தலைவைத் தேபணி தலையுற் றேயவர்
    சரணத் தேவல்கள் சலியாமே
மலைபெற் றேனென மனமோத் தேசெயும்
    வகைசொற் றுயிலை யுமையாளே
அலைபெற் றேயுழ லலசத் தேனினி
    யருளைக் கூடுவ தொருநாளே. 93

நாளோ கழிந்ததினி யானே சிவன்பரம
    ஞானே தயம்பெறு வதோ
வாளோ வேணுங்கலுமை யாளோ தவஞ்சகமு
    மாமோ வருபய னேனே
கேளோ மனம்படுவ தேனே வருங்கவலை
    கேடோ நினைந்தழி யுமோ
தோளே பசுங்கழைய தேனே வேணும்பசிய
    தோகா யெழுந்த துணையே. 94

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

துணையுனை யன்றிக் காணேன்
    சுடரொளி விளக்கே தும்பை
யிணைமலர்ச் சடையான் பாகத்
    தெழுந்தரு ளிறைவி யுன்றன்

புனைமலர்ப் பாதம் போற்றிக்
        கிடந்தனன் புலேயே னம்மே
வனைமுலைத் திருவே யுன்றன்
        பரமெனக் கருணை பாரே. 95

கலிவிருத்தம்

யாரிலே பிறந்துழன்ற பாவகாரி யானுனைச்
சீரினு லிறைஞ்சவுந் தேளிந்தசிந்தை சிந்தியேன்
போரிலே மயங்கினேன் புலங்களைந்து போற்றிலாய்
சூரிலே விழுந்தபோதும் பெற்றதாய் சுதன்கொலோ. 96

அறுசீர்க் கழிநேடிலடி யாசிரியவிருத்தம்

சுதன்பிழை போறுப்பா டாய்முன்
        றந்தையும் போறுப்பான் ருய
ரதம்புரி வாரோ வேரூ
        ரடக்கவுங் கோடுப்பா ருண்டோ
கதம்பம தணியுங் காமக்
        கோட்டியே கருணை பாராய்
சிதம்பர நடனங் கோள்ளுஞ்
        செல்வியே கலவி மாதே. 97

எழுசீர்க் கழிநேடிலடி யாசிரியவிருத்தம்

மாதா கனங்குழையை யோதா திருந்தமத
        மாயா பவங்க ளலவோ
நாதா சவுந்தரியை வேரூ தலேபரம
        ஞான சுகங்க ளலவோ
வேதா கமங்களுரை யேதோ தேரிந்துணரும்
        வீணு னசிந்தை வெறியோர்
பூதா தியும்பிறவு மாரோ கடந்தமுத
        வாரோ புகழ்ந்து ரையுமே. 98

அறுசீர்க் கழிநேடிலடி யாசிரியவிருத்தம்

உரைத்தா யடியேன் றுயரறவே
        கோடுப்பே னேனுஞ்சோல் லுறுதிபேறக்
காத்தா மரையா லள்ளியிடக்

கடையேன் பசிநீங் குதல்கண்டாய்
சீர்த்தா மரையி னுயிரத்தேட்
டிதழே சிறந்த திருப்பதத்தைத்
தாத்தான் குருவா யெழுந்தருளேன்
ருயே யதுவுன் றரும்பரிசே. 99

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

வரிசமுட னைந்துபுல ருகியத றிந்துபத
பங்கய மோருத்த ரதியா
வரிசையுட னெங்கும்விளை யாடியத ழித்துநிதம்
வந்துப ரிகின்ற மயிலே
தேசிகனமு தற்போருளு திப்பதுமோ டுக்கியதிசைப்
பரம வெட்ட வெளியும்
புரிகுழல்ச வுந்தரியே னக்கருள்ப ரம்பரம
வன்னியடி போன்னின் முடியே. 100

சவுந்தரியந்தாதி முற்றிற்று.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sivaloga Thiagarajaswamy Devasthanam, Achalpuram.

ஆச்சாள்புரம் சிவலோகத் தியாகேஸ்வர சுவாமி தரிசனம் கிடைத்தமைக்கு மிகவும் மனம் பூரிப்படைகிறேன். கோவிலை மிகவும் சுத்தமாக வைத்திருக்கும் கோவில் நிர்வாகிகளின் சேவையை மிகவும் பாராட்டுகிறேன். நன்றாக தெய்வத்தரிசனம் செய்துவைத்தார்கள்.

(Sd.) P. கக்கன்

மராமத்து இலாகா அமைச்சர்

24—4—61

உடல் வளர்க்கும் மூலிகைகள்

கடலூர், V. பலராமையா B. A., B. L.,

(மலர் 20, இதழ் 5, பக்கம் 290 இன் தொடர்ச்சி)

நாயுருவி கற்பம் 37.

இது செடியினத்தைச் சேர்ந்தது. சிகப்பு, வெண்மை இரண்டுவகை, இவைகளில் சிகப்பு உயர்ந்தது. ஆனால் அது கிடைப்பதரிது. வெள்ளை நாயுருவி எல்லா இடங்களிலும் இருக்கும். இதையறியாதவர்கள் சிலர். இதன் பூ துணியில் ஒட்டிக் கொள்ளும்..

இந்த செடிகளை சமூலம் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி உலர்ந்தபின் நெருப்புவைத்து சுட்டுச் சாம்பலாக்கி ஒருபடி சாம்பலுக்கு 4 படி ஜலம் விட்டுக் கரைத்துத் தெளிந்தபின், தெளிவையிறுத்து ஈயம்பூசிய பாத்திரத்தில் ஊற்றி எறிக்க நீர் சுண்டி வெண்மையான உப்பாகும். இந்த உப்பு மருந்து வகைகளுக்கு உபயோகமாகிறது. இவ்வுப்பில் ஒரு மிளகளவு எடுத்து ஒரு கோப்பை நீராகாரத்திலாவது, வெந்நீரிலாவது காலை மாலை சாப்பிட்டுவர சகல வியாதியும் தீர்ந்து தேவசரீரமாகும். மூலம், சுவாசகாசம் (Asthma) குணமாகும்.

கீழ் குறிப்பிட்ட முறையின்படி செய்து சாப்பிட மேற்கண்ட வியாதிகள் நீங்குவதல்லாமல் பெருங்கற்பமாகும். ஆனால் மருந்துகள் செய்து வழக்கமுள்ளவர்களே இதைத் தயாரிக்க முடியும்.

நாயுருவி முற்றினதாய் [illegible] பசுவின் கோமயத்தில் நனைத்து பாண்டவாயிலிட்டு பூப்புடத் தைலமிறக்கிவைக்கவும். அத் தைலத்தில் ஒரு குன்றியளவு வெற்றிலையில் வைத்து ஒரு நாளைக்கு ஒருமுறை மென்று சாப்பிட்டுவர பெருமந்தார சுவாச காசம் (Asthma) நுனிக்கிருமல் (Dry Cough) யீனை (Phlagm)

கண்டத்தரிப்பு (Irritation in the throat) நீங்கி காயமதைப் பலப்படுத்தும். சித்தர் சொன்ன கற்பமிது. தப்பாது கண்டு தேறு.

நாயுருவி இலையை எருக்கம் பாலிலரைத்துக் குகைசெய்து சோத்துப்பைபெருமணியாய் அதனுள்வைத்துப் புடமிடக்கட்டும், இந்த உப்பைக் குன்றியிடை கொடுக்க வாயு (Gas) வகைகள் குணப்படும்.

சுக்கு 38.

இஞ்சி உலர்ந்தால் சுக்கு. "சுக்கைப்போல் மருந்தில்லை, சுப்ரமண்யர்போல் தெய்வமில்லை." என்பது முதுமொழி. கேட்கும் வரங்களை உடனே கொடுக்க வல்லவர் சுப்ரமணியர். அதேபோல் சொன்ன வியாதிகளை உடனே தீர்க்கும் வல்லமை யுடையது சுக்கு. இம் மூலியின் பெருமையை நம் பெரியோர்கள் அறிந்தவர்கள். விருந்தாடி வந்தவுடன் மோரில் வெல்லம் கரைத்தோ மோரில்லாவிடில் நீரில் வெல்லத்தைக் கரைத்தோ அதில் சுக்கு தட்டியிட்டுப் பானகமாய்த்தருவது வழக்கம். இந்த பானகம் சாப்பிட்ட கொஞ்சநேரத்திற்கெல்லாம் வயிற்றில், குடலில், அபானத்திலுள்ள வாயு (காற்று) அகன்று பசியைத் தூண்டிவிடும். வந்த விருந்தினர் நன்றாய் ருசித்து உண்பர். ஆனால் இக்காலத்தியவா விருந்தாளிக்குக் காபி கொடுத்தவுடன் அவருக்குப் பித்தம்மீறி பசியடங்கி சாப்பிடும் இலையின் மூலை முடுக்குகளில் உணவை ஒதுக்கி நோயாளியைப்போல் சாப்பிடு கிறார்.

"காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் உண்டால்"

குமரனுவான் என்று மேலே சொல்லியிருக்கிறோம். இஞ்சியைப் பற்றி கீழே எழுதியிருக்கிறோம்.

குறிப்பு:-

சுக்குவின் மேல்தோல் அகற்றியே உபயோகப்படுத்த வேண்டும். பல வியாதிகள் வாயுவினால் (gas) உண்டாகின்றன. (உதா):- மூலம், ஹிருதயதுடிப்பு (Palpetation of the heart) பசி இன்மை, குன்மக்கட்டி (gastinites) ஆகையால் இந்த

வாயுவை அகற்றினுல் சரீரம் பலப்படுமேன்பதில் என்ன ஆக்ஷேபணை. கீழே சுக்கை உபயோகிக்க சில சிறுமுறைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அஜீரணங்களுக்கு:- சுக்கு பலம்-1, சோத்துப்பு பலம் ½, சோத்துப்பை தண்ணீர் விட்டுக் கட்டியாய் அரைத்து சுக்கின் மேல் பூசி கும்பித்தணலில் புகுத்தி வேகவைத்து எடுத்து, உப்புக்கவசம் நீக்கி, சுக்கைத் தூள்செய்து ஒரு சிடிகை முதல் இரண்டு சிடிகை வாயிலிட்டு வேந்நீர் சாப்பிட வயிற்றுப்பல், வயிற்றிரைச்சல், மாறடைப்பு, வாயுவால் உண்டாகும் பேதிகள் குணமாகும்.

பசியுண்டாக:- மேல்தோல் நீக்கிய சுக்கு பலம் 1, நல்ல வேல்லம் பலம்1 இரண்டும் கூட்டி இடித்துப் பதனம்செய்யவும். காலைதோறும் மென்று தின்று நீராகாரம் சாப்பிட்டுவர மந்தாக்னி ரோகம் தீர்ந்து நல்ல பசியுண்டாகும்.

எல்லா வயிற்றுகோளாறுக்கும்:- தோல்நீக்கிய சுக்கு 1 பலம். போடிசெய்த இந்துப்பு பலம் 1 சுக்குவை சிறுதுண்டு களாக நயாரபைசாவைப்போல் நறுக்கி சுக்குத்துண்டுகள் அமுங்க எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டு ரவியில்வைத்து ரசம் இழுத்துக்கோண்டபின் மறுபடியும் சுக்கு அமுங்கும்படி, பழச் சாற்றை ஊற்றி ரவியில் வைத்து உலர்ந்தபின் மறுபடியும் பழச் சார் ஊற்றி உலறவைத்து. இப்படி எழுமுறை செய்து இடித்து வஸ்திரகாயஞ்சேய்து இத்துடன் சீரகம் பலம் 1, பழச்சாற்றில் ஒருமுறை ஊறவைத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்சேய்து வேருகடி பிரமாணம் நீராகாரம் அல்லது வெந்நீரில் கோள்ள வும். தேனிலும் சாப்பிடலாம். இதற்கு சர்வரோக நிவாரணி யெனப்பேயர். மேற்கூறியவைகளைத் தயார்சேய்து வீட்டில் வைத்துக்கோள்ளலாம். 6 மாதங்கள் வரை உபயோகிக்கலாம்.

வேறு சுக்குநீர்:- சுக்குபோடி பலம் 1, தோல் எடுத்த ஏலம் பலம் ¼, இரண்டையும் போடித்து ஜலத்திலிட்டு பனங் கற்கண்டு வேண்டிய அளவு சேர்த்து காய்ச்சிவடித்து கோஞ்சம் பால் சேர்த்து சாப்பிட மிகவும் ருசியாக இருப்பதுமன்றி நல்ல பசியையும் தூண்டும்.

இஞ்சி 39.

சுக்கு, வாய்வு, வாதம் முதலியவைகளைப் போக்கக்கூடியது. இஞ்சிக்கும் இந்த குணங்களுண்டு. ஆனால் இஞ்சிக்கு பித்தத்தை நீக்கும் குணமும் முக்கியமாய் உண்டு. அதை உத்தேசித்தே காலையில் இஞ்சியெனச் சொல்லப்பட்டுள்ளது. இஞ்சி கபங்களைச் சுலபமாய்விலக்கவல்லது. கபத்தை அகற்றக்கூடிய மூலிகளே கற்பங்களாகச் சித்தர்கள் எடுத்துள்ளனர் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இஞ்சி கற்ப சக்தியுடையதா இல்லையா என்பதை நாமேயறிந்து கொள்ளலாம்.

இஞ்சியை நம் வீடுகளில் மோர் தயிர் பச்சடி, சாம்பார் முதலிய ஆகாரங்களில் சாதாரணமாய்ச் சேர்ப்பதுண்டு.

குறிப்பு:-

சுக்குவின் மேல்தோலை நீக்கவேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இஞ்சிக்கு மேல்தோல் நீக்குவதல்லாமல் சுண்ணும்புச் சத்தையும் அகற்றுவது.

உபயோகம்:- இஞ்சியை அரைத்து நீரில் கரைத்து தெளிந்தபின் அத்தெளிவை உபயோகித்தலே முறை. அத்தெளிவின் கீழ் படிந்திருக்கும் வெண்மையான சுண்ணும்பையும் உபயோகப்படுத்தினால் அடிவயிற்றில் உஷ்ணம் மீறி உபத்திரவங்களை உண்டுபண்ணும்.

இஞ்சி சர்ப்பத்:- மேற்சொன்னபடி எடுத்த இஞ்சி சார் ½படி, எலுமிச்சம்பழசார் படி ⅛, இரண்டும் கூட்டி அதில் சீனி ½வீசை கரைத்து அடுப்பேற்றி காய்ச்சி பாகுபதம் வந்ததும் இறக்கி ½படி சுத்தமான தேன்விட்டு கலக்கி சீசாவில் பத்திரப்படுத்தவும்.

காலையில் தேக்கரண்டியளவு வென்னீரில் கலக்கி உட்கொள்ள எல்லா வாத பித்தரோகங்களையும் ஒழிக்கும். நல்ல பசியைத் தூண்டும். ஈரலை (Liver) உற்சாகப் படுத்தும், மசக்கை உள்ள கற்பிணிகளுக்கு நாள் ஒன்றுக்கு 3(அ) 4 முறை ஒரு தேக்கரண்டி ஜலத்தில் கலக்கிக் கொடுக்கவும்.

வாந்தியினால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டி கொடுக்க வாந்தி நிற்கும். இந்த சர்பத் 3 மாதங்கள் வரை கெடாமலிருக்கும். (தொடரும்)

பதிமூன்றும் பரிபாடல்

சி. சுப்பிரமணிய தேசிகர்.

இப்பரிபாடலில் கடைச்சங்க காலத்தில் ஒருமுறை "விரிகதிர்வேனில் எதிர்வரவுமாரி"யின்போது அமைந்த கோள்களின் நிலையும், மதிமறைவும் முதலியன முதற்பகுதியிலும், பின் மற்றொரு பகுதியில் கன்னியர் அம்பாவாடலாகிய தைந்நீராடலும் கூறப்படுகின்றன. இவற்றைப்பற்றி ஆராய்வது இக்கட்டுரை. இதிலுள்ள குணங் குற்றங்களைத் தம் நுண்மாண் நுழைபுலனால் தெளிவுசெய்வது ஆன்றமைந்த அறிஞர்க்குரியது.

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
எரிசடை எழில்வேழம் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருள்தெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி உயர்நிற்ப அந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்குப்பால் எய்த இறையமன்
வில்லிற் கடைமகரம் மேவப்பாம் பொல்லை
மதியம் மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர் வேனில்
எதிர்வரவு மாரி இயைகெனவிவ் வாற்றல்
புரைகெழு சையம் பொழிமழை தாழ
நெரிதருஉம் வையைப் புனல்."

இம்முதற்பகுதியின் உரையினால் விசும்பு மதியமொடு நாண்மீன்களைப் புணர்ப்பதால் உளவாகும் இடபவீதி மிதுன வீதி, மேடவீதி என்னும் மூவகை வீதிகளும் அவற்றுக்குரிய நந்நான்கு இராசிகளும், அவற்றுக்குரிய ஒன்பது ஒன்பது நாண்மீன்களும், அப்பன்னிரு ராசிகளுள் வெள்ளி இடபத்தும், செவ்வாய் மேடத்தும், புதன் மிதுனத்தும், இரவி சிங்கத்தும்,

வியாழன் மீனத்தும், சனியும் சந்திரனும் ராகுவும் மகரத்தும், கேது கர்க்கடகத்தும் அமைய, மதியினை அரவு தீண்ட, அகத்தியன் என்னும் மீன் மிதுனத்துக்குப் பொருந்த, முதுவேனிற்குப் பின்வரும் கார்காலத்து மழைபெய்க என்ற விதியால் சையமலைக்கண் மழைபெய்ய, வைகையில் நீர் பெருகிவருதலும் முதலியன அறியத்தக்கனவாகும்.

இதன்கண் இரவி சிங்கராசியில் இருக்க, அதற்கு ஆறும் இராசியில் இருக்கும் மதியினை அரவு தீண்டுமாறு எங்ஙனம் பொருந்துமோ! மதிமறைவுக்கு இரவிக்கு ஏழாம் இராசியில் மதி அமையவேண்டியது நியதியன்றோ! அன்றியும், வெள்ளியும், புதனும் இரவியைவிட்டு விலகக்கூடிய மிக்க தூரம் முறையே 48 பாகையும், 27 பாகையும் ஆகும். அங்ஙனமாக வெள்ளி 60 பாகையின் மேலும், புதன் 30 பாகையின் மேலும் இரவியைவிட்டு விலகி நிற்பனவாகக் கொள்வது எங்ஙனம் பொருந்துமோ! உரைகாரர் இரவியைச் சிங்கராசியில்கொண்டது 'புலர்விடியல் அங்கி உயர்நிற்ப' என்பதனாலாகும். 'புலரிக் காலத்துக் கார்த்திகைமீன் உச்சமாக' எனப்பொருள்கொண்டால் இரவி சிங்கராசியிலேயே அமையவேண்டியதாகும். அங்ஙனம் பொருள் கொள்ளாமல் 'புலரிக்காலத்துக் கார்த்திகைமீன் உச்சிக்குமுன் கிழக்கில் உயர்ந்துநிற்ப' என்றே பொருள் கொள்ளவேண்டி யிருக்கிறது. அங்ஙனம் கொள்ளவே அப்போது அசுவினி அல்லது பரணிமீன் உச்சமாகும், ஆக அப்போது கர்க்கடகம் உதயமாயிருக்கும்; இரவியும் அதில் அமையும்; மதிமறைவும் உளதாகலாம்; வெள்ளியும், புதனும் வானநூல் வரம்புக்குட்பட்டுப் பொருந்தும்; பழந்தமிழ்ச் சங்கப் பரிபாடலும் வானநூலுடன் முரண்படாது சிறந்த அரிய பொருளைக் கூறியதாகும்; அல்லாவிடில் யாவும் முரண்பட்டுப் பயனில் கூற்றாகுமென்க. அங்ஙனமாயின் "அங்கி உயர் நிற்ப" என்றது, 'அசுவனி உயர்நிற்ப' என்றோ அல்லது 'பரணி உயர்நிற்ப' என்றோ ஆசிரியர் பாடியிருக்கலாமே எனின்? அவை கார்த்திகைமீன்போல யாவரும் அறியத் தக்கன அல்லாமையால் யாவரும் அறியத்தக்க 'அங்கி உயர்நிற்ப' எனப் பொதுவகையால் கூறினர் என்க.

இனி, அகத்தியன் என்பது மிதுனராசியில் 21 பாகை 12 கலையில் சமரேகைக்குத் தெற்கில் 52 பாகை 39 கலையில்,

கிராந்தி விருத்தத்திலிருந்து (கோள்களின் வீதியிலிருந்து) விலகித் தேற்கே 75 பாகை 48 கலையில் உள்ள ஒருநிலைச் சோதியாகும். அது இடபமாதம் பதினேழாந்தேதி வரையில் இரவியின் ஒளியுள் மறைந்து (அஸ்தமித்து), கர்க்கடகமாதம் பதினோராந்தேதி வரையில் வேளிப்படும் (உதயமாகும்). இதனை கும்பகோணம், யாழ்ப்பாணம் திருக்கணித பஞ்சாங்கங்களில் குறித்த மாத தேதி வரையில் அகத்தியர் அஸ்தமனம், அகத்தியர் உதயம் எனக் குறித்திருப்பதால் அறியலாம். அகத்தியன் நிலைபெயரும் கோளன்று; மிதுனராசியைவிட்டு விலகுவதில்லை. ஆதலின், 'போதியின் முனிவன் புரைவரைக் கீறி - மிதுனம் அடைய' என்பதற்கு 'மிதுனராசியில் அமைந்த அகத்தியமீன் உயர்ந்த உதயவரையைக் கிழித்து உதயமாக' எனப் பொருள்கோள்வதே பொருந்துவது. 'போதியின் முனிவன்' என்பது அகத்தியன் என்னுந் துணையாய்நின்றது. உதயவரை அத்தவரை என்பன உலகவழக்கு.

அகத்தியன் உதயமாகும் காலத்தில் கோள்களின் நிலை கூறப்படுவதால், இரவி கர்க்கடக மாதத்தில் பதினொரு பாகை வரை சென்றிருக்கும் என்பது தெளிவாகும். ஆகவே அம் மாதத்தில் ''மதியம் மறையவருநாள்'' என்பதனால், பூரணைத் திதியும் பூராடநாளும் அறியப்படுமன்றிச் சிங்கமாதமும் அவிட்ட நாளும் அறியப்படா.

ஆனால், ''இருதுக்களையும் அயனங்களையும் சாயன முறையாகக் கோள்வதே அமைவுடைத்தாகும்'' என்னும் சோதிட சித்தாந்த திருக்கணிதர்களின் கோள்கைப்படி, கர்க்கடகமாதம் எட்டாந்தேதி வரையில் இரவி சிங்கராசியில் புகுவதால் (சிம்மாயணமாவதால்) அன்றே கார்காலத் தோடக்கம் கோள்ளப்படின் ஆவணித்திங்களும் அவிட்டநாளும் அமையாவோ எனின்? மற்றைய மாதங்களிலும் சாயன முறையாகவே மாதத் தோடக்கங்கள் கோள்ளப்படவேண்டும். அங்ஙனம் நம்மவர்கள் கோள்வதில்லையேன்க. இப்போது இந்திய அரசாங்கத்தார் ஹிந்தியில் வேளியிடும் பஞ்சாங்கத்தில் சாயன முறைப்படியே மார்ச்சுமாதம் 22ந் தேதியை மேடமாதத் தோடக்கமாக (வருடப் பிறப்பாக)க் கோண்டும், மற்றைய மாதங்களுக்கும் இரவியின் சாரப்படி நாட்கணக்குக் கோள்ளாமல் குறிப்பிட்டபடி நாட் கணக்குக் கோண்டும் குறித்துள்ளனர். அது ஓரளவு கோள்ளத்

தக்கதாயினும் இரவியின் சாரப்படி சுத்தமாக அமைந்த மேடாயனம் முதலியவற்றையே மேடமாதத் தொடக்கம் (வருடப் பிறப்பு) முதலியவாகக் கொள்வதே முறைமையாகும்.)

இனி மற்றொரு பகுதி

"கணைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்க
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிரும் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்
புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமணல் அருவியின்
ஊதை ஊர்தர உறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பில்
தையல் மகளிர் ஈரணி புலர்த்தர
வையை நினக்கு மடைவாய்த் தன்று;
மையாடல் ஆடல் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாடல் ஆடும் புணர்ப்பின் அவரவர்
தீயெரிப் பாலும் செறிதவமுன் பற்றியோ?
தாயருகா நின்று தவத்தைந்நீர் ஆடுதல்
நீயுரைத்தி வையை நதி."

இப் பகுதியில் பொதுவகையால் வெம்பாதாக வியனில வரைப்பு எனவும், சிறப்புவகையால் கண்ணிமை கனியாக் கைக்கிளைக் காமத்துத் தமக்கு மணம் இயைக எனவும் வேண்டுதல் செய்து கன்னியர் அம்பாவாடலாகிய தைந்நீராடுதல் கூறப்படுகிறது.

இங்கே "நளிமாரிப் பிற்குளத்து - மாயிரும் திங்கள் மறுநிறை ஆதிரை - விரிநூல் அந்தணர் விழவு தொடங்க, கன்னியரும் அம்பாவாடலைத் தொடங்கினரென்பதால்; முற்குளம் கடைக்குளம் என்பன பூராடம் உத்தராடம் என்னும் நாண்மீன்களைக் குறிப்பனவாதலின் அவற்றில் இரவி அமையும் தனு மாதத்தில் மதிநிறை நாளை எடுத்துவரும் ஆதிரைநாள் விழவினை

ஆகமங்களை அறிந்த சைவ அந்தணர் தொடங்க, கன்னியரும் அம்பாவாடலைத் தொடங்கினராவர். ஆதிரைநாள் விழவு ஆதிரையன்று தொடங்கப்படுவதன்று; அதற்குப் பத்துநாள் முன் தொடங்கப்படுவதென்பது பலருமறிந்தது. ஆகவே கன்னியரது அம்பாவாடலும் அப்போதே தொடங்கி ஆதிரையோடு முடிவுற்றதாகும். அங்ஙனமன்றி அம்பாவாடல் ஆதிரையன்றே தொடங்கப்படுவதாயின் முடிவுறுவதும் அன்றுதானே? அல்லது தனுமாத முடிவிலோ? தனுமாதமுடிவிலெனின், ஆதிரையின் பின் தனுமாதம் இந்தனைநாள் உண்டு என்னும் நியதியில்லை; சில காலத்துப் பலநாளும், சில காலத்துச் சிலநாளும் ஒருநாளுமின்றியும் வரும். (அடுத்து விகாரி ஆண்டு ஆதிரையை நோக்குக.) ஆதலால் தனுமாத முடிவரையெனல் பொருந்தாது. அடுத்த அமாவாசைவரை என்றோ பூரணைவரை என்றோ கொள்ளவும் முடியாது. எனவே ஆதிரையோடுதான் அம்பாவாடலும் முடிவுற்றதாதல் வேண்டும்.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

I had the extreme good fortune to visit this famous shrine today. I am very happy to see the ideal condition in which the shrine is maintained with devotion and piety. The Lord is impressive and I am looking forward to the next opportunity to have a Darshan.

(Sd.) G. R. Jagadisan,
4—2—61,
High Court Judge, Madras.

செய்திகள்

* *

தருமையாதீனத்தில் :

சித்திராபௌர்ணமி

தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கும் ஸ்ரீ தர்மபுரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ ஆறுமுககுமாரருக்கும் சித்திராபௌர்ணமி குறித்து 30—4—61 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குக் காவிரிநீர்த்துறையிலிருந்து வீதிவலமாக பாற்காவடி முதலியன எடுத்துவந்து அபிஷேகம் செய்யப்பெற்றன. அலங்கார ஆராதனைகளும் சிறப்புற நிகழ்ந்தன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபட்டார்கள். அன்பர்கள் பலரும் வழிபட்டு உய்ந்தனர்.

கனகாபிஷேக விழாக் குழுவினர்க்குப் பாராட்டு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு அன்பர்கள் பலர் சேர்ந்து மிகச் சிறப்பான முறையில் 12—3—61 அன்று கனகாபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தனர். அந்நற்செயலைப் பாராட்டி அதில் முன்னணியில் நின்று முயன்று வெற்றிகண்ட அன்பர் எல்லோருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தில் அருளாசி வழங்கவேண்டுமென்று திருவுளங் கொண்டார்கள். அதன்படி 22—4—61 ஆம் நாள் சனிக்கிழமையன்று கனகாபிஷேக விழாக் குழுவினர்களின் நற்செயலைப் பாராட்டும் விழா நிகழ்ந்தது.

அன்று காலை 10 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்தருளினார்கள். கனகாபிஷேக விழாக் குழுவினர்களாகிய அன்பர்கள்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக விழாவில்



ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவியை அருச்சிக்கப் பொன் மலர்களை அளித்தல்

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக விழாவில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களை
திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பொன்மலர்களால் அருச்சித்தல்

திருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணி கனகாபிஷேக விழாவில்

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயத்தில் சுவாசினிபூஜை

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக விழா



பாராட்டுக்கூட்டம்

பலர் பல நகரங்களிலிருந்தும் வந்து ஸ்ரீ சொக்கநாதப் பெருமானையும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களையும் தரிசித்துத் திருவருளும் குருவருளும் பெற்று உய்ந்தனர்.

மாலை 5 மணி அளவில் வேய்ங்குழல் இன்னிசைக் கச்சேரி தக்க பக்கவாத்தியங்களுடன் திரு. வேணுகோபால் பிள்ளை அவர்கள் குழுவினரால் நிகழ்த்தப்பெற்றது. பின்னர் பாராட்டுக் கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் எழுந்தருளியானுர்கள். ஒடுக்கம் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கனகாபிஷேகக் குழுவினர் அனைவரையும் வரவேற்ருர்கள். சிதம்பரம் டாக்டர். திரு. K. அரங்கசாமிப்பிள்ளை M.B.,B.S., அவர்கள் இனிய தமிழில் அனைவரையும் வரவேற்று நன்றி தெரிவித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் விழாக் குழுவினரின் முயற்சியையும், அவர்கள் செய்த நற்செயலையும் பாராட்டி ஆசிவழங்கினுர்கள்.

இரவு 8 மணியளவில் தருமையாதீன வித்துவான், எம்பார், பாகவதர், ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினரால் ஸ்ரீ குரு ஞானசம்பந்தரின் அருள்வரலாறு கதாகாலக்ஷேபமாகச் செய்யப் பெற்றது. விழாவிற்கும், இன்னிசை நிகழ்ச்சிகளுக்கும் பல அன்பர்கள் வந்து கலந்துகொண்டார்கள்.

சித்திரைத் திங்கட் பெருவிழா

திருவையாற்றில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பிலவஆண்டு சித்திரைத்திங்கள் 8-ஆம் நாள் (20—4—61) தொடங்கி 17-ஆம் நாள் (29—4—61) முடிய உள்ள நாட்களில் சித்திரைத்திங்கட் பெருவிழா மிக்க சிறப்பாக நடைபெற்றது. திருவிழா நாட்களில் விசேஷ நாதஸ்வரக் கச்சேரிகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும், சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன. 1—5—61 திங்கட்கிழமை சப்தஸ்தலப் பிரதக்ஷிணம் நிகழ்ந்தது. அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினுர்கள்.

22—4—61 சனிக்கிழமையன்று திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் சிறப்புற நிகழ்ந்தன. அன்று டிஸ்டிரிக்ட் முன்சீப், திரு. R. வெங்கட்ராம அய்யர், B. Sc., B. L. அவர்கள் தலைமையேற்று நிகழ்த்திய பேருரையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளைப் பாராட்டி இவர்கள் ஆட்சியில் ஆலயத் திருப்பணிகள் மிகவும் சிறந்தமுறையில் நடைபெறுகின்றன என்று கூறி ஆலயங்களில் தேவாரவகுப்புகளை நடத்தி பரிசுகள் கொடுத்து மாணவர்களை ஊக்கித் திருமுறைகளைப் பரப்புவது போற்றற்குரியது என்றும் கூறி மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்கள்.

கல்வெட்டாராய்ச்சிக்கலைஞர், வித்வான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் 'சுந்தரர்தேவாரம்' என்ற தலைப்பிலும், வித்துவான், திரு. M. குஞ்சிதபாதம் அவர்கள் 'பெரியபுராணம்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள். திருமுறைகள் யானைமேல் ஒப்பனை செய்யப்பெற்று பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு வீதிவலமாகக் கொணரப் பெற்றன. கட்டளை விசாரணை ஸ்ரீமத். விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளை உட னிருந்து சிறப்புற நிகழ்த்தினார்கள்.

திருப்பனந்தாளில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ் தானத்தில் பிலவஆண்டு சித்திரைத்திங்கள் 8-ஆம் நாள் (20—4—61) தொடங்கி 17-ஆம் நாள் (29—4—61) முடிய உள்ள நாட்களில் சித்திரைத்திங்கட் பெருவிழா சிறப்புற நிகழ்ந் தது. 29—4—61 அன்று பஞ்சமூர்த்திகளும் அணைக்கரைக்கு எழுந்தருளிக் கொள்ளிடத்தில் தீர்த்தம் கொடுத்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. மக்கள் பலர் திரண்டுவந்து கண்டுகளித்தனர்.

திருவிழா நாட்களில் விசேஷ நாதஸ்வரக் கச்சேரிகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும், சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந் தன. 25—4—61 செவ்வாய்க்கிழமையன்று திருமுறை விழா வும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. அன்று

திருமுறைகள் யானைமேல் ஒப்பனை செய்யப்பெற்று திருமுறைப் பாராயணத்தோடு திருவீதியுலாவாகக் கொணரப் பெற்றன. தேவார வகுப்பு மாணவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் அருளால் பரிசுகள் வழங்கப்பட்டன.

திருமுறை பற்றிய சொற்பொழிவுகள் அறிஞர்களால் நிகழ்த்தப்பட்டன. கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நாள் தோறும் தொடக்கவுரை முடிவுரை கூறி சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

திருக்கடவூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத் தில் 20—4—61 முதல் 29—4—61 முடிய உள்ள நாட்களில் சித்திரைத்திங்கட் பெருவிழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. விழா நாட்களில் நாதஸ்வரக் கச்சேரிகளும், கதாகாலக்ஷேபங் களும் சமயச் சொற்பொழிவுகளும் சிறப்புற நிகழ்ந்தன. கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளை உடனிருந்து தொடக்கவுரை முதலியன கூறி நிகழ்த்துவித்தார்கள்.

25—4—61 செவ்வாய்க்கிழமை காலசம்ஹார சேவை. ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி திருவீதிக்கு எழுந்தருளும் நாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கூடிக் கண்டு இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றனர்.

சீகாழியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 20-4-61 முதல் தொடங்கி 29-4-61 முடிய உள்ள நாட்களில் சித்திரைத் திங்கட்பெருவிழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. 21—4—61 ஆம் நாள் உலகத் தாயாகிய திருநிலைநாயகியம்பாள் ஞானக் குழந்தையாகிய சம்பந்தருக்கு ஞானப்பாலூட்டிய திருநாள்.

அச்சிறப்புத் திருநாள் நிகழ்ச்சி பகல் 11 மணி அளவில் நிகழ்ந்தது. அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் திரளாக வந்து வழிபட்டுய்ந்தனர்.

விழா நாட்களில் இன்னிசை நிகழ்ச்சிகளும், சமயச் சொற்பொழிவுகளும், நாதஸ்வர இன்னிசையும் நிகழ்ந்தன. 20-4-61 ஆம் நாள் முதல் 24-4-61 ஆம் நாள் முடிய உள்ள நாட்களில் சுகப்பிரம்மம் திரு. R. இராமசாமி சாஸ்திரிகளால் பெரிய புராணப் பிரசங்கம் நிகழ்த்தப்பெற்றது.

27—4—61 ஆம்நாள் திருமுறை விழாவும், திருமுறை வகுப்பு ஆண்டு விழாவும் யானைமேல் திருமுறை திருவீதியுலாவும் நிகழ்ந்தன. தேவார வகுப்பு மாணவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் பரிசுகள் வழங்கப்பட்டன. கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தொடக்கவுரை நன்றியுரை முதலியன கூறி சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீ கணநாதநாயனார் கும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருளாணையின் வண்ணம் 19—4—61 புதன்கிழமையன்று அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய ஸ்ரீ கணநாத நாயனாருக்குப் புதிதாகக் கோயில் எடுப்பித்துக் கும்பாபிஷேகமும் துவார சக்திக்கு ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள். கும்பாபிஷேகத்தை அன்பர்கள் பலர் வந்து தரிசித்தனர்.

ஸ்ரீ சட்டைநாதர் சிறப்பு வழிபாடு

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமிக்கு ஆறுவதாண்டு சிறப்பு வழிபாடாக 5—5—61 வெள்ளிக்கிழமை, விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன.

இரவு ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் புறப்பாடு சிறப்புற நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். சிறப்பு வழிபாடு குறித்து மாலை 5-மணி முதல் சொற்பொழிவுகளும், காலை முதல் திருமுறைப் பாராயண மும் நிகழ்ந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் கூடிக் கண்டு களித்தனர்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

குன்றத்தூர் மயிலாப்பூர் முதலிய தலங்களில்

சமயப் பிரசார வழிபாடு.

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் "மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு" 16-4-61 ஞாயிறு காலை 9-மணிக்கு சைதாப்பேட்டை ஸ்ரீகாரவீசுவரர் ஆலயத்திலும், 10-30மணிக்கு கோவூர் ஸ்ரீ சுந்தரேசுவரர் ஆலயத்திலும் சிறப்பாக நடை பெற்றது. அவ்வக்கோயில்களின் அறங்காவலர்கள் குழுவினரை வரவேற்று உடனிருந்து வழிபாட்டைநடத்திவைத்தனர். கோவூர் ஆலயப் பிரசாரமண்டபத்தில், வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில், திரு. ச சச்சிதானந்தம் பிள்ளை, ருக்மணி குக்கர் உரிமையாளர் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் ஆகியோர் சமயவாழ்வின் நன்மைபற்றியும், வழி பாட்டின் அவசியம் பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். புலவர். திரு. புண்ணியகோடி முதலியார் வரவேற்புரை கூறினார். பிறகு கோவூர் சோமசுந்தரம் கழக உயர்நிலைப்பள்ளியில் திரு. அ சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் கட்டி உதவப்பெற்ற வகுப்பு அறையை ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திறந்துவைத்து ஆசி கூறினார்கள். 12-மணிக்கு ஸ்ரீசேக்கிழார் பெருமானால் கட்டப்பெற்றதும், அவரது ஆத்மார்த்தமாகக் கொண்டதுமான ஸ்ரீ நாகேச்சுவரர் தேவாலயத்தில் வழிபாடு நடைபெற்றது. வழிபாட்டின் பின்னர் அறங்காவலர்கள் குழு வினருக்குச் சிற்றுண்டியும் நீர்மோரும் வழங்கி உபசரித்தனர். பிறகு வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திருநெல்வேலி இந்துக் கல்லூரித் தமிழ்ப்

பேராசிரியர், இராவ்சாகிப், வித்துவான், திரு. கு. அருணுசலக் கவுண்டர் அவர்கள் "சேக்கிழார்காலச் சமயநிலைமையும் தற்காலச் சமயநிலைமையும்" என்னும் பொருள்பற்றிப் பேசி தற்காலம் செய்யவேண்டிய கடமைகளை வற்புறுத்தினுர்கள்.

பிறகு குன்றத்தூர் மலைமீதுள்ள முருகப்பெருமான் திருக்கோயிலில் வழிபாடு சிறப்பாக நிகழ்ந்தது. வழிபாட்டுக் குழுவினர் அனைவரும் வெய்யிலையும் கருங்கல் வெப்பத்தையும் பொருட்படுத்தாது மலையேறி முருகனை வழிபட்டது குழுவினரின் பக்திப் பெருக்கை எடுத்துக்காட்டுவதாக இலங்கியது. பிறகு சேக்கிழார் பெருமான் திருக்கோயிலில் குழுவினர் சிறப்பாக வழிபாடு நிகழ்த்தினர். எல்லாக் கோயில்களிலும் நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் தேவாரம் ஓதிச் சிறப்பித்தார்கள். இறைபணிக் கழக மாணவி குமாரி. கௌரியும் பக்திப் பாடல்களைப் பாடி மகிழ்வித்தார். சேக்கிழார் கோயில் முன் மண்டபத்தில் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் -தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சென்னை மாகாணக் கல்லூரிப் பேராசிரியர் திரு. பி. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் கவியின் சிறப்புப்பற்றியும், இறைபணிக் கழகப் புலவர், திரு. வீரபத்திரனுர் அவர்கள் சமய வளர்ச்சி மக்கட்கு நலம் விளைப்பது குறித்தும் பேசினுர்கள். அருப்புக்கோட்டை திரு. சுந்தர பாரதி எம். எல். ஏ. அவர்கள் தெய்வ வழிபாட்டின் அவசியத்தைப்பற்றி பேசினுர்கள்.

குன்றத்தூரில் சென்னை காண்ட்ராக்டர் திரு. சி. மாசிலாமணி முதலியார் அவர்கள் குழுவினருக்கு மாகேஸ்வரபூஜை செய்து உபசரித்தார்கள்.

மாலை 6 மணிக்கு மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் ஆலயத்தில் குழுவினர் வழிபாடு புரிந்தனர். கோயில் அறங்காவலர், திரு. டி. மாணிக்கஞ்செட்டியார் அவர்கள் குழுவினரை வரவேற்று உடனிருந்து வழிபாடுநிகழ்த்திவைத்தார்கள். பிறகு வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருவள்ளுவர் சிவநெறியைச் சிறப்பித்துள்ளமையைக் குறிப்பிட்டு விரிவுரை நிகழ்த்தினுர்கள்

பின்னர் மயிலாப்பூர் ஸ்ரீ காபாலீசுவரர் ஆலயத்தில் குழுவினர் வழிபாடு நிகழ்த்தினர். சிவபுராணம் ஓதிக்கொண்டே பெரிய பிரகாரம் வலம்வந்தனர். இதில் முன்னுள் நீதிபதி,

திரு. வி. சுப்பிரமணியம் அவர்களும், அறநிலைய ஆணையாளர், திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அறங்காவலர்களான திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார், திரு. அண்ணாமலை முதலியார் ஆகியோர் உடனிருந்து வழிபாட்டை நிகழ்த்திவைத்தனர். சுவாமி சந்நிதியில் தலத்தேவாரத்தை திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் இசையோடு ஓதி எல்லோரையும் இறைவழிபாட்டில் ஈடுபடச்செய்தார். மற்ற சந்நிதியில் தேவாரம் முதலிய பக்திப் பாடல்களை உளமுருகப் பாடினூர். வழிபாட்டின் பின்னர் ஆலய பிரசார மண்டபத்தில் நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டத்தின் இரண்டாவதாண்டு நிறைவு விழாவும், தொண்டைமண்டலத் தேவாரப் பாடல்பெற்ற 32 தல வழி பாட்டுப் பூர்த்தி விழாவும் அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் தலைமையில் கொண்டாடப் பெற்றது. திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினூர்.

திரு. ச. சிவகுமாரன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினூர். உயர்நீதிமன்ற முன்னுள் நீதிபதி திரு. வி. சுப்பிர மணியம் அவர்கள் விழாவினைத் தொடங்கிவைத்தார்கள். அவர்கள் தருமபுர ஆதீனம் வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தை ஏழாண்டுகட்கு முன் சென்னையில் நிறுவியது. தொடங்கும்போது நிலையத்தில் மட்டும் சில விழாக்கள், வகுப்புக்கள் நடத்தும் என்றுதான் எதிர்பார்த்தோம். இவ்வளவு சிறந்த பணிகளைச் செய்யும் என்று எதிர்பார்க்கவில்லை. தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தக்கவர்களை வைத்துச் சிறந்த முறையில் சமயப் பிரசாரத்தை நிகழ்த்தி வருகின்றூர்கள். இது மிகவும் போற்றக்கூடியது. நிலையத்தினர் பலரையும் ஒன்றுசேர்ந்துக்கொண்டு ஒவ்வொரு மாதமும் பாடல்பெற்ற கோயில்கட்குச் சென்று வழிபாடியற்றுவ தோடு ஆங்காங்குள்ளவர்கட்குச் சமயப் பிரசாரமும் நிகழ்த்தி வருவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். ஒரு தேதி குறிப் பிட்டு ஒருமுறை ஓர் ஊருக்குச் சென்றுவருவதே கஷ்டமாய் இருக்கும்போது நிலையத்தார் இரண்டுவருடகாலமாக 25 கூட்டம் குறிப்பிட்ட தேதிகளில் நிகழ்த்தியிருப்பது மிகவும் போற்றிப் பாராட்டித்தக்க செயலாகும். இன்றைய வழிபாட்டில் சிவ புராணம் ஓதிக்கொண்டு வரும்போது உள்ளம் நெகிழ்ச்சி யடைவதை உணர்ந்தேன். தேவாரம் முதலிய பக்திப்பாடல்கள்

ஆன்ம வளர்ச்சியை உண்டுபண்ணும் இயல்பினது என்பதை இவ்வழிபாட்டால் நாம் நன்கு உணரலாம். எலும்பைப் பெண்ணாக்கிய தலமிது. இது நடக்குமா என்கின்றார்கள் சிலர். சிவநேசச் செட்டியாரைப் போன்ற பக்தியும், ஒழுக்கமும் உடையவர்கள் இன்றிருப்பார்களேயானால் இன்றும் அவ்வற்புத நிகழ்ச்சி நடைபெறும் என்று குறிப்பிட்டு விழாவினைத் தொடங்கி வைத்தார்கள்.

தலைமை வகித்த அறநிலைய ஆணையாளர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் நகரவாழ்வு இக்காலத்தில் நரகவாழ்வாகத் தோன்றுகிறது. இந்நிலையை மாற்றவேண்டுமானால் திருக்கோயில்கட்குச் சென்று வழிபடவேண்டும். அப்போதுதான் நமது உள்ளத்திற்கு அமைதியுண்டாகிறது. நகரத்தில் உள்ள மக்களை இம்மாதிரி மாதந்தோறும் ஒருமுறை கிராமங்களிலுள்ள பாடல்பெற்ற கோயில்கட்கு அழைத்துச் சென்று வழிபாடு நிகழ்த்திவரும் தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தினரைப் போற்றுகின்றேன். இவ்வாறு பல இடங்களிலும் வழிபாட்டுக்குழு தோன்றினால் நாட்டிற்கு நலமுண்டாகும். அமைதி நிலைக்கும். கோயிலுக்குப் போகும்போது அறிவுச் செருக்கு, பணச்செருக்கு, பதவிச்செருக்கு முதலியன நம்மிடத்தில் இருக்கக்கூடாது. உள்ளபடியே இறைவனை உணர்ந்து வழிபட்டால் இச்செருக்குக்கு இடமில்லை. இத் தலவழிபாட்டு நிகழ்ச்சி வழிபடுவோர்க்குப் பயிற்சியளிக்கும் நிலையில் அமைந்திருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. இறைவன் நம்மிடம் கேட்பது நம்முடைய இருதயத்தைதான் என்று ஒரு வடமொழிச் சுலோகம் அறிவிக்கின்றது. அதுபோல் நமது இருதயத்தை இறைபால் அர்ப்பணித்து வழிபடக்கற்று அதனால் சிறந்தபலனை அடையவேண்டும் என்று கூறினார்கள்.

'ஆலய வழிபாடு' என்ற நூலை வெளியிட்ட திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தருமபுர ஆதீனம் செய்துவரும் பணிகளுள் சிறந்த பணி இவ்வழிபாடு என்றும், ஆலயவழிபாடு எவ்வாறு நிகழ்த்தவேண்டும் என்பதை இந்நூல் வாயிலாக மக்கட்குத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறதென்றும், இந்நூல் வெளிவருவதற்குப் பொருளுதவி புரிந்த திரு. கே. சி. நாகலிங்க முதலியார் பாராட்டிற்கு உரியவர் என்றும், அவ்வப்போதும்

வழிபாட்டுக் குழுவினருக்கு மாகேசுவரபூஜை செய்தும், சிற்றுண்டி உதவியும் பணியாற்றிய தொண்டர்கள் சிவபுண்ணியச் செல்வர்களென்றும் பாராட்டிப் பேசினர்கள். பிறகு திரு. முருகவேள் வழிபாட்டினல் விளையும் பலன்' பற்றியும், கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் திருமயிலை திருப்பதிகம் பற்றியும் பேசினர்கள். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவருக்கும் நன்றி கூறுகையில் தொண்டைநாட்டில் உள்ள 32 திருக்கோயில்களிலும் உள்ள அறங்காவலர், சிவாசாரியார் முதலியவர்களும் தங்கள் வழிபாட்டிற்கு ஒத்து உழைத்ததைப் பாராட்டி நன்றி தெரிவித்தார்கள். ஆங்காங்கும் குழுவினருக்கு மாகேஸ்வர பூஜை, சிற்றுண்டி முதலியனசெய்து உபசரித்த மேயர் கம்பெனி மாசிலாமணி முதலியார், காண்ட்ராக்டர் சி. மாசிலாமணி முதலியார், கே. சி. நாகலிங்க முதலியார், புதுவை சேனபதி முதலியார், திருக்கோயில் அறங்காவலர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். வழிபாட்டில் கலந்துகொண்ட தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, வழிபடும் இடங்களில் எல்லாம் ஆண்டவன் அருட்செயல் விளக்கம் சில நடைபெற்றதை உருக்கத்துடன் எடுத்துக்கூறி இருபத்தைந்து கூட்டங்களிலும் ஒரு சிறு இடையூறும் நிகழவொட்டாமல் காத்து அருள்செய்த இறையருளுக்கும், குருவருளுக்கும் நன்றிகலந்த வணக்கம் தெரிவித்தார்கள்.

அடுத்த மாதம் 14—5—61 இரண்டாவது ஞாயிறன்று திருவதிகை, திருவாமூர், திருநாவலூர் ஆகிய தலங்களில் வழிபாடு நிகழும் என்று அறிவிக்கப்பட்டது. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினர். நிலயச் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. ஸ்ரீ கற்பகாம்பிகா சமேத ஸ்ரீ கபாலீசருக்கு அபிஷேக ஆராதனை செய்துவைக்கப்பட்டது.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர், சே. செல்வப்ப முதலியார்

ஓதப் படுபவர் வேதப் பயிற்சி யுளார் கடலிற்
சேதப் படுபவர் கப்ப லுடைந்தவர் சேவகரான்
மோதப் படுபவர் வேத்தாணை மீறிய மூர்க்கரென்று
மேதப் படுபவர் யெண்ணு மெழுத்து மிகழ்ந்தவரே.

எதிர்காலம் ☞	கே. முத்துஜோதிடர்

(பிலவஹு வைகாசிமீ 1௳ முதல் 32௳ முடிய)

(14—5—61 முதல் 14—6—61 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி முதல்பாதம் சுபம் தரும். 2, 3, 4 பாதங்கள் மிச்ர பலனைத்தரும். பரணி 4 பாதங்களும், கார்த்திகை முதல் பாதமும் தொழில் விருத்தி குடும்பசுகம், நஷ்டதன வரத்து, கல்யாண வார்த்தைகள், சஞ்சார பலன்கள் ஏற்படச் செய்யும். திங்கள், புதன் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் இடம் மாறலையும், தொழில் விருத்தியையும், வித்யா விருத்தியையும் தரும். ரோஹிணி 4 பாதங்களும் ஆரோக்கியக் குறைவை உண்டுபண்ணும். வரவுக்கு மிஞ்சின செலவைத் தரும். மனம் நிம்மதியிராது. மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் சஞ்சாரபலனைத் தரும். நூதன தொழில் விருத்தியும், உத்தியோக லாபமும் கிடைக்கச்செய்யும். மத்தியில் சில்லரைத் தொல்லைகளும், வரவுக்குமிஞ்சிய செலவும் ஏற்படச்செய்யும். புதன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்களும் திருவாதிரை நான்கு பாதங்களும் ஆரோக்கியத்தையும் இல்லற சுகத்தையும் தரும். வித்யாபிவிருத்தியாகும், எங்கும் பிரசித்தி ஏற்படச் செய்யும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் வெகுநாளாக நடவாத காரியத்தை நடத்தித்தரும். பந்து மித்திரர்களாலும், ராஜாங்கத்தாலும் அனுகூலங்கள் ஏற்படச்செய்யும். ஸ்தாவர, ஜங்கம சொத்துக்களில் மாறுதல் உண்டுபண்ணும். புதன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் விசேஷமான சுக, சௌக்கியங்களை உண்டுபண்ணும். வியாபாரவிருத்தியும் நூதன உத்தியோகப் பிராப்தியும், நூதன கட்டிடங்கள் வாங்குதலும், கிரய

விக்ரயங்களில் லாபகரமும், நல்ல கீர்த்தியும், உயர் பதவிகளும் ஏற்படச் செய்யும், வியாழன் வேள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மக நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் உத்தியோக உயர்வையும் மேலோர் பேரியோர் அன்பையும் தரும். வாஹன யோகமும் கிரஹபூமி லாபங்களும் தரும். பூரம் நான்கு பாதங்களும், உத்திரம் முதல்பாதமும் சுகதுக்கங்கள் சமமாகும். சிறு நஷ்டங்களும் தொழில் குறைவும் விரோதமும் காட்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் சுபமிராது. வீண் அலேச்சல்களேயும் மனஸ்தாபத்தையும் தரும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் விசேஷமான சுகராஜபோகங்களேயும் தானதர்மாதி புண்ணிய பலன்களேயும் யாத்ராபலனேயும், தெய்வீகத் தோற்றங்களேயும் தந்து உலகப் பிரஸித்தியையும் தரும். சித்திரை 1, 2 பாதங்கள் தீராத கடன்களேத் தீர்த்துவைத்து இல்லற சுகங்களே ஓங்கச்செய்யும், குடும்ப சுகத்தையும் ஆடைஆபரணச் சேர்க்கையும் தரும். புதன், வேள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்களும்,, சுவாதி முதல்பாதமும் மிச்ர பலனேத் தரும். அதிகச் செலவினங்களும் கார்ய தாமதமும் ஏற்படச்செய்யும். சுவாதி 2, 3 4 பாதங்களும், விசாகம் 1, 2, 3 பாதங்களும் விசேஷ சுபத்தைத்தரும். மஹாயக்ஞ பலன்களேயும் தேவதா குருபக்தியையும் ஸர்வஸித்திகளேயும் ஏற்படச் செய்யும். மனம் சாந்தி அடையும். புதன், வேள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கும், அதிக உழைப்பும் அதிக விரயமும் ஏற்படச்செய்யும். செய்காரியங்கள் தவக்கமடையும்; தெய்வபலம் பூர்ணமாகும், ஆரோக்யமும் சுகமும் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும், பூராடம் நான்கு பாதங்களும் கவலேகளேயே கோடுக்கும், தொழில் உத்தியோகம் முதலியவை

களில் இடைஞ்சல் காட்டும். அடிக்கடி கிரய விக்கிரயங்களைத் தரும், செலவினங்கள் அதிகமாகும். திங்கள், புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் எதிர்பார்த்ததற்கு மேலான உத்தம பலன்களைக் கொடுக்கும். உத்தியோக உயர்வுடன் மேல் பதவிகளைத் தரும். நினைத்ததெல்லாம் தானாக வந்துசேரும், இடம் மாறுதலும் சுகவாஸமும் ஏற்படச்செய்யும். புதன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் ஆரோக்யத்தையும் ஸந்தோஷத்தையும் தரும், ஆடை ஆபரணங்களையும் கிரஹ லாபங்களையும் தரும். சதயம் நான்கு பாதங்களும், பூரட்டாதி 1, 2 3 பாதங்களும் நூதன முறையில் தொழிலைத் தந்து உலக வியாபகத்தை உண்டுபண்ணும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் தானாகவந்து சேரச்செய்யும், கடன் நீங்கி சந்தோஷம் உண்டுபண்ணும்: இல்லறம் ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நான்காம் பாதம் அதிக உழைப்பைத் தந்து இடம் மாறச்செய்யும், நூதனதொழில் உண்டுபண்ணும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும், ரேவதி நான்கு பாதங்களும், விசேஷாதிகளையும், கௌரவங்களையும், உத்தியோக லாபங்களையும், ஆரோக்யத்தையும், கிரஹசுகங்களையும் தரும். மேலோர் பெரியோர் அன்பினால், ஸகலமும் ஸாத்யமாகச் செய்யும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் லாபகரத்தோடு மாறுதல் ஏற்படச் செய்யும். தெய்வ பலம் ஓங்கும், சுபம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு:— ஷெ மாதம் உத்தர துருவத்தில் இயற்கைகளால் மாறுதல்கள் காட்டும். எங்கும் அதிக தாபமும் தொத்து நோய்களும் உண்டாக்கும். பூர்வபுண்ணிய பலத்தால் பிரபுத்வம் அடைந்தவர்களும் மேலோர்களும் தர்மாதிகாரிகளும் தனக்குக் கிடைத்த புண்ணிய சுபபலன்களை நிரந்தரமாய் அனுபவிப்பதின் பொருட்டு கடவுளால் லோகோபகாரமாய் அளிக்கப்பட்ட பிராசீன வேத தர்மசாஸ்திர பரிபாலனங்களையும் ஆலயாதி தேவஸ்தானங்களையும் ரக்ஷித்துக்கொண்டு எல்லாம் கடவுள் செயல் தான் என்று நினைத்து பௌருஷத்தை மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளாமல் தன் கடமைகளைச் சரிவர செய்துவர சகல சுகபோகங்களையும் நீடிக்கச்செய்யும். கடவுள் முன் நின்று உலகத்தை ரக்ஷிப்பார்.